குயிலின்பெயர்—கோகிலங்களகண்டம் பிகங்குயிலாகும். ஆ-௬.

செம்போத்தின்பெயர்— குக்கில்செம்போத்துச்சகோரமுமதற்கே. ஆ-உ.

கோழியின்பெயர் — குக்குடஞ்சேவல் வாரணங்கோழி. ஆ-௬.

கூகையின்பெயர் — கூகைகுடிஞைகுராலேகோட்டான். ஆ-௬.

மயிலின்பெயர்-கேகயஞ்சிகண்டிசிகியே மயூரந், தோகைமேகாரமஞ்ஞைபிணிமுக, மாயினவெல்லாமயிலெனவறைவர். ஆ-அ.

மயிர்பீலியின்பெயர்-தொங்கலுங்கலாபமுமிறகுங்கூழையு,மிங்கிவைமயிலின்பீலியென்ப, தங்கியவொருவழிக்கூந்தலெனத்தகும். ஆ-ரு.

இறகினடிமுள்ளின்பெயர்—முருந்தேயி
றகின்முதன்முள்ளாகும். . (க.)

மயிற்சிகையின்பெயர் — அநந்தமயூராம்
விரிசிகையாகும். . . (க.)

காக்கையின்பெயர்—காரிவாயசங்கொடி
கரும்பிள்ளை, தேரிஞன்குங்காக்கையாகும். ச.

வலியன்பெயர் — வலியன்பாரத்துவாச
ன்வயவன். . . . ஆஉ.

கருக்குருவியின்பெயர்— கஞ்சநம்வலிய
ன்கயவாய்கரிக்குரீஇ. . . ஆரு.

கிளியின்பெயர் — வன்னிதத்தைசுகமரி
சுவாகநங், கிள்ளையவந்திகைகோங்கிளியே. அ.

கருங்கிளியின்பெயர்—கோங்கிள்ளைகருங்
கிளியாகும். . . . ஆஉ.

புறுவின்பெயர்—தூதுணமுங்களரவமு
ம்பாராவதமுஞ், சீர்சாலகபோதமும்புறவெ
னப்படுமே. . . ஆச.

* மாடப்புறவின்பெயர் —காளபதமே
மாடப்புறவாம். . . (க.)

* கருப்புறவின்பெயர்—கபோதம்பா
ராவதங்கரும்புறவாகும். . ஆஉ.

கவுதாரியின்பெயர்— இதலேபூழான்சிவ
ல்கவுதாரி. . . ஆரு.

அன்றிவின்பெயர்—கிரவுஞ்சமன்றில். க.

ஊர்க்குருவியின்பெயர்-சகடமூர்க்குருவி.

சிவலின்பெயர் — இதலேபகண்டைசிவ
லாகும்மே. . . . . ஆஉ.

பகண்டையின்பெயர்— சில்லைபகண்டை
யாமெனச்செப்புவர். . . (க.)

நாகணவாய்ப்புள்ளின்பெயர்--பூவைசா
ரிகைநாகணவாய்ப்புள். . . ஆஉ.

காடையின்பெயர்—குறும்பூழ்காடை யி
ன்பெயரெனக்கூறுவர். . . (க)

மீனெறிசிறுபறவையின்பெயர்—சிரலே
சிச்சிலிமீனெறிசிறுபறவை. . ஆ-உ.

பறவைப்பொதுப்பெயர் — புள்ளுப்
போகில்சகுநம்பிணிமுக, மொள்ளியபறவை
க்கெல்லாம்பொதுப்பெயர், பதங்கமுங்ககமு
ம்விகங்கமுமாகும். . . . ஆ-எ.

அன்னத்தின்பெயர்—ஓதிமமஞ்சமெகி
னமன்ன, நீதியினுன்னமுமவ்வினப்பறவை.ச.

அன்னச்சிறகின்பெயர்—தூவியன்னச்
சிறகெனச்சொல்லுவர். . . (க.)

சக்கரவாகத்தின்பெயர்—நேமிப்புள்ளு
ஞ்சகோரமுமென்றிவை, யாகுஞ்சக்கரவாகப்
பெயரே. . . . ஆ-உ.

பெருங்குருகின்பெயர்--யானையுண்குரு
குபெருங்குருகாகும். . . (க.)

கொய்யடிநாரையின்பெயர்- குருகுவண்
டானங்கொய்யடிநாரை. . ஆ-உ.

பெருநாரையின்பெயர் — பெருநாரை
போதாப்பிதாவுமாகும். . . ஆ-உ.

* வெண்ணாரையின்பெயர்—வெண்ணா
ரைசாரசம். . . . (க.)

* கருநாரையின்பெயர்—கருநாரைசிகரி.

நிலாமுகியின்பெயர்— சகோரம்போரந்
தைதண்ணிலாமுகியே. . . ஆ-உ.

நீர்க்காக்கையின்பெயர்—கரண்டநீர்க்கா
க்கை. . . . . (க.)

சம்பங்கோழியின்பெயர் — கம்புள்சம்ப
ங்கோழி. . . . (க.)

கொக்கின்பெயர்—குரண்டமும்பகமுங் கொக்கின்பெயரே. . . . ஆ-உ.

வண்டின்பெயர்—அளியேகேசரமறுபதங்க மூதொடு, வரியேசுரும்புகீதஞ்சூத, மரிமாபிர மரமராபதம்வரிக்கடை,பிரசந்தும்பிமதுகரமி ஞிறு, விரவியதேனீவண்டெனப்படுமே. ய-அ.

ஆண்வண்டின்பெயர் — சுரும்பவற்று ணெனச்சொல்லவும்படுமே, மதுகரந்தும் பி யாகவும்வைப்பர். . . ஆ-ரு.

இந்திரகோபத்தின்பெயர்—ஈயன்மூதா விந்திரகோபம். . . ஆ-உ.

விட்டிற்பறவையின்பெயர்--பதங்கமுஞ் சலபமும்விட்டிற்பறவை. . ஆ-உ.

சிள்வீட்டின்பெயர் — சிதடிநெடிசில்லி கைசிள்வீடாகும். . . ஆ-ரு.

நுளம்பின்பெயர் — அளுலமுளுலவலு நொள்ளலுநுளம்பே. . . ஆ-ரு.

கொசுகின்பெயர்—மசகங்கொசுகெ ன வகுத்தனர்புலவர். . . (க.)

துருஞ்சிலின்பெயர்—துருஞ்சிலாலாலம்.

வாவலின்பெயர்—அஞ்சலிகைவாவல். (க.)

சேவலெனும்பெயர்— மயிலொழித்தெ ல்லாப்பறவையினாண்பெயர்,பயிலுஞ்சேவலெ னமொழிப்பால.

போத்தெனும்பெயர் — மயிலேயெழா லொடுபோத்தெனப்படுமே.

புள்ளின்பெண்பெயர்—பெட்டைபெ டைபேடைபுள்ளின்பெண்பெயர். ஆ-ரு.

அளகெனும்பெயர் - கோழிகூகைபெண் பெயரல்லன, வாயுங்காலையளகெனவறையார்.

பார்ப்பு-பிள்ளையெனும்பெயர்—பார்ப்பும்பிள்ளையும்பறப்பவற்றிளமை.

பறவைமுட்டையின்பெயர்—அண்டமுஞ்சினையுமவற்றின்முட்டை. . ஆ-உ.

வாயலகின்பெயர் — துண்டமுமூக்கும் வாயலகாகும். . ஆ-உ.

இறகின்பெயர்--பறையுந்தூவியுஞ்சிறையும்பிச்சமு, மிறகின்பெயர்கூலல்கூழையென்றிவை, யருகியொருவழியாகிட னுடைய. ஆ-ச.

புள்ளொலிக்கூட்டத்தின்பெயர்--துழனி புள்ளொலிக்கூட்டமாகும். . . (க.)

* புள்ளீட்டத்தின்பெயர் — தொழுதி புள்ளீட்டம். . . . (க.)

முதலையின்பெயர்-கிஞ்சுமாரமுமிடங்கருங்கராமு, மிங்கிவைவன்மீனுமுதலையாகும். ச.

ஆண்முதலையின்பெயர் — கராமவற்றுணைக்கருதல்வேண்டும். . (க.)

சுறாமீனின்பெயர்-மகரஞ்சுறாமீனாகவைப்பர். . . . . (க.)

இறான்மீனின்பெயர்-இறவேயிறான்மீன்.

கெளிற்றுமீனின்பெயர்—கெடிறுகெளிற்றுமீன். . . . . (க.)

மீன்பொதுப்பெயர் — மயிலைமீநமற்சமீன்பொதுப்பெயர். . . ஆ-௩.

* பெருமீனின்பெயர்—யானைமீன்றிமிபெருமீனாகும். . . . ஆ-உ.

யானைமீனைவிழுங்குமீனின்பெயர் — யானையைவிழுங்குமீன்றிமிங்கிலமென்ப. . (க.)

திமிங்கிலத்தைவிழுங்குமீனின்பெயர் — அம்மீனைவிழுங்குமீன்றிமிங்கிலகிலமே. (க.)

மலங்கின்பெயர்—எனமலங்கு நா றை யென்ருகும். . . . (க.)

சங்கின்பெயர்—நந்து பணிலம்வளை நா குசுரிமுகங், கம்புகோடுசங்கெனப்படுமே. எ.

சிறந்தசங்கின்பெயர்—சங்கிற்சிறந்தது சாதிவலம்புரி, பொங்கியகொக்கரையென்றும் புகல்வர். . . . ஆ உ.

வலம்புரியிற் சிறந்தசங்கின்பெயர்—அங் கதிற்சிறந்தது சலஞ்சலமென்ப. . (க.)

சலஞ்சலத்திற்சிறந்தசங்கின்பெயர் — அதிலுஞ்சிறந்தது பாஞ்சசந்நியம். (க.)

நத்தையின்பெயர்—கருநந்துநாகு சுரி முகங்கூனத்தை. . . ஆ ச.

கிளிஞ்சிலின்பெயர்--இறலெருந்தேரல் கிளிஞ்சிலென்ப. . . . ஆ ரு.

* சிப்பியின்பெயர் — இப்பிசுத்திசிப்பி யாகும். . . . ஆ உ.

* பல்வியின்பெயர் —புள்ளிகௌளிகோ கிலம்பல்வி. . . ஆ ரு.

தவளையின்பெயர்-- உரிமறைநீகந்தேரை மண்டூகம், பருபவைவ்யைத்துந்தவ ளைப் பெ யரே. . . . ஆ ரு.

ஆமையின்பெயர்--கச்சபங்கூர்மங்கமட மாமை. . . . . ஆ ரு.

*பெண்ணையின்பெயர்—துளிபெண் ணை. . . . . . (க)

* அட்டையின்பெயர்-சளுகமட்டை. க.

நண்டின்பெயர்-அலவனள்ளிகுளிர்ஞெ ண்டார்மதி, களவனென்றிவைகர்க்கடகப் பெ யரே. . . . ஆ சு.

ஞண்டின்பெயர்—அலவனுஞென் றறைதற்குமுரித்தே. (க.)

உளுவின்பெயர்—உளுவுசுவாகும். (க.)

எறும்பின்பெயர்—உறவியெறும்பே. க.

தேளின்பெயர்—தெறுக்கால்பறப்பன் றேளேவிருச்சிக, மலமென்பெயருந்தேளின் மேற்றே. ஆ. ச.

சிலந்தியின்பெயர்—சிலம்பியுமுலூதை யுஞ்சிலந்தியென்றாகும். ஆ. உ.

நாகரவண்டின்பெயர்—நாகரவண்டினு மநொள்ளை. (க.)

கறையான்பெயர் — சிதலையாழல்செல் லேகறையான். ஆ. ரு.

புழுவின்பெயர்—கிருமியுங்கீடமும்புழு வின்பெயரே. ஆ. உ.

கோற்றேனின்பெயர் — கோற்றேன் பிரசம். (க.)

தேன்கூட்டின்பெயர்-இறாறேன்கூடே.

கோற்புழுவின்பெயர்—கோற்புழுவலண் டுகேடமுமாகும். ஆ. உ.

காதலீகையிற்போதிப்பெருந்தவன்,றெவ்வடுகாலவைவேலெழிலி, யவ்வைபாடியவஃபற்கிழவன், றேன்றூர்ச்சேந்தன் றெரிசொற்றிவாகரத்து மூன்றாவதுவிலங்கின்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

நான்காவது,

மரப்பெயர்த்தொகுதி.

தருவின் வருக்கமாவன—சந்தானந்தேவ தாரந்தருக்கற்பக, மந்தாரம்பாரிசாதமவற்றி ன்வருக்கம். . . . ஆடு.

சந்தநத்தின்பெயர்—சாந்தமலயஞ்சந் திரதிலக, மேய்ந்தவாரஞ்சந்திவைசந்தநம். ரு.

அகிலின்பெயர்-அகருவும்பூழிலுமகிலெ னவறைவர், பகரிற்காகதுண்டமுமாகும். ௩.

ஆச்சாமரத்தின்பெயர்—சாலமராமரமா வேயாச்சா. . . . ஆ௩.

மகிழ்மரத்தின்பெயர்—வகுளமிலஞ்சி மகிழ்மரமென்ப. . . ஆஉ.

தேக்கின்பெயர்—சாதிதேக்கே. (க.)

சண்பகத்தின்பெயர்-சம்பகஞ்சண்பகம்.

ஆலின்பெயர்-பூதவங்கான்மரம்வடமரந் தொன்மர, மோதியபழுமரங்கோளியாலே. சு.

அரசின்பெயர் — கணவம்பணையேமரா மரம்போதி, யச்சுவத்தம்பிப்பிலமரசே. ஆசு.

அசோகின்பெயர்—பிண்டிசெயலைகா கோளியசோகு. . . ஆ௩.

இத்தியின்பெயர்—இத்தியிறலி. (க.)

மருதின்பெயர்—அருச்சுநமருதே. (க.)

கொன்றையின்பெயர்—இதழிகடுக்கை யாக்குவதங்கொன்றை. . ஆ௩.

குராவின்பெயர் — கோட்டங்குடிலங்கு ராவெனக்கூறுவர். . . ஆஉ.

நாவலின்பெயர்—சம்புநாவல். (க.)

வேம்பின்பெயர்—நிம்பம்வேம்பே. க.

அத்தியின்பெயர் — அதவுதும்பரமத்தி யாகும். . . . ஆ உ.

புளிமாவின்பெயர் — ஆம்பிராஞ்சூதமா மைபுளிமா. . . . ஆ ரு.

தேமாவின்பெயர்-சூதஞ்சேதாரமாம்பிராங் கொக்குத், தீநின்மரத்திவைதேமாவாகும். ௪.

இருப்பையின்பெயர் - மதூகமிருப்பை யெனவகுத்தனரே. . . (க.)

செருந்தியின்பெயர் — பஞ்சரஞ்செங் கோடுசெருந்தியாகும். . . ஆ உ.

கோங்கின்பெயர்—துருமோற்பலங்கன் னிகாரங்கோங்கே. . . ஆ உ.

பச்சிலைமரத்தின்பெயர்- பசும்பிடிதமா லம்பச்சிலையாகும். . . ஆ உ.

வன்னியின்பெயர்—கலிகஞ்சமியேகுலிச ம்வன்னி. . . . ஆ ரு.

கருங்காலியின்பெயர்—கதிரங்கருங்காலி.

எட்டியின்பெயர் — காஞ்சிரையெட்டி.

செங்கருங்காலியின்பெயர்—சிறுமாரோ டஞ்செங்கருங்காலி. . .. (க.)

புன்னையின்பெயர் — புன்னைபுந்நாகம்.

சுரபுன்னையின்பெயர்—வழைசுரபுன்னை.

புனமுருங்கையின்பெயர்— புன்கெண் கிளவிபுனமுருங்கைப்பெயர். . . (க.)

ஆத்தியின்பெயர்—ஆரோதாதகியாத்தி யாகும். . . . . ஆ உ.

மஞ்சாடிமரத்தின்பெயர்-திலகமஞ்சாடி.

இலவமரத்தின்பெயர்-இலவம்பொங்கர்.

நெல்லியின்பெயர்—ஆமலகநெல்லி.(க.)

கடுமரத்தின்பெயர்—அரிதகிகடுமரம்.

புலியின்பெயர்-சிந்தஞ்சிந்தூரஞ்சிறந்தவா
ம்பிரம், வந்ததிந்திருணியெகினம்புலியே. ரு.
குருந்தின்பெயர்—குருந்துகுந்தம். க.
வெடபாலையின்பெயர்-குடசம்வெட்பாலை.
குமிழின்பெயர்—கூம்பல்கடம்பல்குமி
ழெனக்கூறுவர். . . ஆ-உ.
குடைவேலின்பெயர்-உடைகுடைவேலே.
பாதிரிமரத்தின்பெயர்—பாடலம்பாதிரி.
முருக்கின்பெயர்—கவிரோகிஞ்சுகமுருக்
கெனக்கருதுவர். . . ஆ-உ.
தேற்றின்பெயர்—இல்லந்தேறும். (க)
விளாவின்பெயர்—வெள்ளில்விளாவாம்.
வில்வத்தின்பெயர் — கூவிளம்வில்வமா
லூரங்கூவிலை. . . ஆ-ரு.
வேங்கையின்பெயர்—திமிசுந்திமிலுங்
கணியும்வேங்கை. . . ஆ-ரு.
கடம்பின்பெயர்—கதம்பம்விசாலநீபங்
கடம்பே. . . . ஆ-ரு.
வெண்கடம்பின்பெயர்—மராவெண்கட
ம்பின்பெயராகும்மே. . . (க.)
பலாவின்பெயர்— பநசம்வருக்கைபலா
வெனப்பகர்வர். . . ஆ-உ.
ஈரப்பலாவின்பெயர்— ஆசினியீரப்பலா
வாகும்மே. . . . (க.)
அழிஞ்சிலின்பெயர் — அழிஞ்சில்சேமர
மநங்கோலமாகும். . . ஆ-உ.
மாதுளையின்பெயர்—மாதுளங்கழுமுண்
மாதுளையாகும். . . ஆ-உ.
தாதுமாதுளையின்பெயர்—தாடிமந்தா
துமாதுளையென்ப. (க.)

ஈலுமிச்சையின்பெயர்—சம்பீரமுருகெலுமிச்சையாகும். . . ஆ—உ.

நாரத்தையின்பெயர்— நாந்தநாரத்தையாகுமென்ப. . . (க.)

குருக்கத்தியின்பெயர்— குருகேமாதவிகுருக்கத்தியாகும். . . ஆ—உ.

அகத்தியின்பெயர்—அச்சங்கரீரமுநியேயகத்தி. . . . ஆ—௩.

எருக்கின்பெயர்-அருக்கமெருக்கே.(க.)

களாவின்பெயர்—களக்களாவே. (க.)

இலந்தையின்பெயர்—இரத்திவதரியிலந்தையாகும். . . . . ஆ—உ.

காயாவின்பெயர்—காசைபூவைகாயாவாகும். . . . . ஆ—உ.

ஞாழலின்பெயர்—நறவஞ்சுள்ளிநாகஞாழல். . . . . ஆ—௩.

புன்கின்பெயர்— நத்தமாலம்புன்கெனநவில்வர். . . . . (க.)

குங்குமமரத்தின்பெயர்— மரவந்துருக்கங்குங்குமமாகும். . ஆ—உ.

* சதுரக்கள்ளியின்பெயர்—வச்சிராங்கங்கண்டீர்வதமெொடு, வச்சிரஞ்சதுரக்கள்ளிக்குவைப்பர். . . . ஆ—௩.

* அநிச்சத்தின்பெயர்— நறவஞ்சுள்ளியருப்பலமனிச்சம். . . ஆ—௩.

தணக்கின்பெயர்-நுணவுதணக்கே. (க.)

ஓடையின்பெயர்-உலவையேோடை. (க.)

ஒடுவின்பெயர்—ஓடுவேயுடிப்பை. (க.)

உழிஞ்சிலின்பெயர்— உன்னமுழிஞ்சில்.

சேமரத்தின்பெயர்—ஏகினஞ்சேமரமா
ண்மரமென்ப. . . ஆ-உ.

கமுகின்பெயர்-கந்திபூகம்பூக்கங்கமுகே.௫.

பனையின்பெயர் —பெண்ணைதாலம்புற்
றுளிபோந்தையென், றெண்ணியநாமம்பனை
யெனவிசைப்பர். . . ஆ-௫.

இளம்பனையின்பெயர் - போந்தையிளை
ம்பனையாகவும்புகல்வர். . . (க.)

தெங்கின்பெயர்—நாளிகேரந்தெங்குதா
ழையெனநவில்வர். . . ஆ-உ.

மூங்கிலின்பெயர்— காம்புதிகிரிகண்வே
ழஞ்சந்தி, தூம்புமுளைவெதிர்விண்டுவேரன்,
முந்தூழ்தட்டைகீசகம்வேய்பணை, யம்புவரை
வேணுக்கழையமையோங்கல், பாதிரிகிளை யரி
பாண்டிலுட்பட, வருபவைமூங்கிலெனவகுத்
தனரே. . . . ஆ-உ௫.

கரும்பின்பெயர் — கழைவேழமிக்குக்
கன்னல்கரும்பே. . . ஆ-௪.

தாழையின்பெயர் — கண்டல்கேதகை
மடிகைகைதைமுடங்கல், வண்டமர்தாழையென
வகுத்தனரே. . . . ஆ-௫.

வாழையின்பெயர்—கதலியுமரம்பையும்
வாழையாகும். . . ஆ-உ.

பூவாதுகாய்க்குமரத்தின்பெயர்--கோளி
பூவாதுகாய்க்குங்குளிர்மரம். . (க.)

வண்டுணுமலர்மரமாவன — சண்பகமும்
பேய்க்கையும்வண்டுணுமலர்மரம். . (உ.)

மரப்பொதுப்பெயர்— பாதவந்தாருத்
தருவேதாவர,மோதியமூலமரப்பொதுப்பெ
யரே. . . . . ஆ-௫.

மரச்செறிவின்பெயர்-பொதும்பர்மரச்செறிவு. . . . . . (௧.)

மரப்பொதும்பின்பெயர் — கோடரம்பொதும்பே. . . . (௧.)

நந்தநவநத்தின்பெயர்-தேம்பொழின்மரக்காத்தோட்டந்துடவை,யுய்யாநஞ்சோலைவநமுத்தியாநந், தண்டலைகாநமடவிபதிறென்று, மீண்டியநந்தநவநமெனவிசைப்பர். ஆ௰௧.

காட்டின்பெயர் - கடம்வியல்பழுவங்கட்சிகுறும்பொறை, கடறுகாந்தாரமடவிகான்வநங், ககநங்காண்டங்கட்சிமுளரி, சுரமத்தமாரணியங்கானங்களரி, சீரணிபொச்சைவிடர் தில்லங்காடே. . . ஆ௨௫.

இலையுதிர்ந்தமுதுகாட்டின் பெயர்— முதையிலையுதிர்வுபிறங்கியமுதுகாடே. (௧.)

கரிகாட்டின்பெயர் — பொச்சையுஞ்சுரமும்பொதிகரிகாடே. . . ஆ௫.

காவற்காட்டின்பெயர்—ஆணிளைகாவற்காடெனவறைவர். . . ஆ௨.

ஒருமரமொருபெயருணாக்குங்கிளவி, வரைவிலவென்மனார்வள்ளியோரோ.

தூற்றின்பெயர்-இறும்பேமிடைதூறு.

இண்டையின்பெயர்— இண்டையீங்கை.

முள்ளுடைமூலத்தின்பெயர்—முண்டகமுள்ளுடைமூலமென்ப. . . (௧.)

முள்ளின்பெயர்— கண்டகங்கடுவேமுள்ளெனக்கருதுவர். . . ஆ௨.

மரக்காழின்பெயர்—ஆசினிகரியேயரியேவைரஞ், சேகேமரத்தின்காழெனச்செப்புவர். ஆ௫.

பிரம்பின்பெயர் — வேத்திராஞ்சாதிசூரல் பிரம்பே. . . . . . ஆடா.

ஆண்மரத்தின்பெயர்— அகக்காழ்வன்ம ரமாண்மரமாகும், அவைகருங்காலிமுதலாயுள் ளன. . . . . . . ஆஉ.

பெண்மரத்தின்பெயர்— புறக்காழ்வன் புல்பெண்மரமாகும், அவைதாம், தெரிக்கிற் பனைகமுகுதெங்குமூங்கில். ஆஉ.

அலிமரத்தின்பெயர்—முருக்குநார்பான் மராமுதலாயின, வெளிறலிமரமெனும்விகற்பம் பெறுமே. . . . (க.)

சிறுதூற்றின்பெயர்— அறலேபதுக்கை சிறுதூறுகும். . . ஆஉ.

மருந்தெனும்பெயர் — புல்லுமரனும் புதலும்பூடும், வல்லியும்பெயர்க்கொடைமரு ந்தெனப்படுமே.

அத்திரசத்திரந்தைத்தபுண்மாற்றுமருந் தின்பெயர்- தைத்தவத்திராஞ்சத்திரந்தணிக்கு, மெய்த்தநன்மருந்தேசல்லியகரணி. (க.)

துணிபட்டவுறுப்பினைப்பொருத்துமரு ந்தின்பெயர்— துண்டமானவுறுப்புத்துணியி னைச், சந்துசெய்மருந்தேசந்தாநகரணி. (க.)

விரணத்தழும்புகளை நீக்குமருந்தின் பெ யர்-விரணமுற்றழும்புநீக்கிமெய்யினைத், தகை மைசெய்மருந்தேசமநியகரணி. . (க.)

உயிர்தருமருந்தின்பெயர் — உயிர்தரு மருந்தேமிருதசஞ்சீவநி. . . (க.)

மரமுதலிளமையின்பெயர்--பிள்ளைகுழ விகன்றும்பார்த்தெனக், கொள்பமரமுதலிளை மைப்பெயர்க்கொடை. . ஆடா.

அவ்விளமைப்பெயர்க்குரியவல்லன—
நெல்லும்புல்லுநேராரான்னே. . ஆ-௨

மரக்கொம்பின்பெயர்-பொங்கர்காம்புசா
கையுறுப்புக்,கோடுபிறக்கஞ்சினைபணைபுலவை,
கொடரம்விடபந்தருமரக்கொம்பே. ஆ-௰௨.

தழையின்பெயர்-உலவைதழையே (௧.)

இளங்கொம்பின்பெயர் — வளாரிளங்
கொம்பே. . . . (௧.)

இலையின்பெயர்- பத்திரமேலைபாசடை
தண்ணடை,சாகந்தமாலந்தழைபாசிலைபடை,
பேசியபன்னமிலையெனப்படுமே. ஆ-௰.

தளிரின்பெயர்-வல்லரிகுழைமுறிமஞ்சரி
கிசலயம். பல்லவமலங்கல்கிளைதளிராகும். ௮.

தளிர்த்தலின்பெயர்— இலிர்த்தலுஞ்சிலி
ர்த்தலுங்குழைத்தலுந்தளிர்த்தல். ஆ-௫.

அடிவெண்குருத்தின்பெயர் — முருந்
தேமுதலிற்செறிவெண்குருத்தே. . (௧.)

கொத்தின்பெயர்—தொத்துமிணருந்
துணருமஞ்சரியுங்,கொத்தின்றொடர்ச்சியைக்
கூறுங்கிளவி. . . . ஆ-௪.

பசுங்காயின்பெயர்-பசுங்காய்தீவிளி. ௧.

பழத்தின்பெயர்—பலங்கனிபழமே. ௨.

பரலினுட்படுகுருத்தின்பெயர் - பயினை
பரலினுட்படுகுருத்தே. . . (௧.)

வெட்டுக்குருத்தின்பெயர்— பிசினை
யாணிவெட்டுக்குருத்தே. . ஆ-௨.

நந்தியாவர்த்தத்தின்பெயர் — வலம்புரி
நந்தியாவர்த்தமாகும். . . (௧.)

கஞ்சாவின்பெயர் — கஞ்சங்குல்லைகஞ்
சாவாகும். . ஆ-௨.

நொச்சியின்பெயர் — சிந்துவார நீர்க்குண்டிநொச்சி. . . . ஆ-உ.

காந்தளின்பெயர்-- காந்தடோன்றிபற்றைகோடலென்,ருய்ந்தநான்குங்காந்தளாகும்.சு.

செங்காந்தளின்பெயர் — காந்தடோன்றிபற்றைசெங்காந்தள். . . ஆ-ரு.

கோடையென்னும்பெயர் — வெண்காந்தள்செங்காந்தளென்றிருவிகற்பமுங், கொண்டேவழங்குங்கோடைப்பெயரே.

ஊமத்தையின்பெயர் — உந்மத்தமத்தமூமத்தைப்பெயரே. . ஆ-உ.

ஆமணக்கின்பெயர்-ஏரண்டமாமணக்கு.

குறிஞ்சியின்பெயர்-கோரண்டங்குறிஞ்சி.

அலரியின்பெயர் — கரவீரமலரிகணவீரமுமாம். . . . . ஆ-உ.

வெட்சியின்பெயர் — செச்சைசிந்தூரம்வெட்சியாகும். . . . ஆ-உ.

சிறுபூளையின்பெயர் — உழிஞைசிறுபூளையெனவுரைத்தனரே. . . (க.)

பருத்தியின்பெயர் — பரியேபன்னல்கார்பாசம்பருத்தி. . . ஆ-ரு.

திப்பிலியின்பெயர் — திப்பிலிகாமன்சிறுமூலகமே. . . . ஆ-உ.

துளசியின்பெயர் — துளசிகுல்லைதுளபம்வநந்துழாய். . . . ஆ-ச.

மிளகின்பெயர் — மரீசிகறியிவைமிளகெனவைப்பர். . . . . ஆ-உ.

மஞ்சளின்பெயர் — மஞ்சளரிசநம். (க.)

கருணையின்பெயர் — கந்தங்கருணை. (க.)

சிறுகிழங்கின்பெயர் — சாசஞ்சிறுகிழங் காகுமென்ப. . . . (க.)

வாசந்தருபலபண்டத்தின்பெயர் — தக ரந்தக்கோலங்கோட்டஞ்சாதிக்கா, யிலவங்கமா ஞ்சிகச்சோலமேலமெனப், பகரும்வாசந்தரு பண்டப்பெயரே. . . . ஆ-அ.

* வெட்டிவேரின்பெயர் — மூலகந்தம் பீதகத்தொடு, வேரியிருவேலிவெட்டிவே ரெ ன்ப. . . . . ஆ-சு.

* இலாமிச்சையின்பெயர் — வேர்வாச மிலாமிச்சைமேலாகுமமே. . . ஆ-உ.

கடுகின்பெயர் — கடிப்பகையையவிகடுகி ன்பெயரே. . . . ஆ-உ.

கொத்துமலியின்பெயர் — ஊருளரிசிகொ த்துமலியெனவுரைப்பர். . . (க)

கழங்கு-அல்லதுகழற்காயின் பெயர் — கழங்கேழுழல். . . . (க.)

கழங்கின்கொடியின்பெயர் — கொடிக் கழலாகும். . . . (க.)

கிலுகிலுப்பையின்பெயர் — பகன்றை கிலுகிலுப்பை. . . . (க.)

சேம்பின்பெயர்-சகுடஞ்சேம்பே. (க.)

சிறுகீரையின்பெயர் — சில்லிசாகிநிசிறு கீரைப்பெயரே. . . . ஆ-உ.

* கொத்தான்பெயர் — நந்தைகொத் தானாந்தையுமாகும். . . ஆ-உ.

* பாற்சொற்றியின்பெயர் - பாயசம்பா ற்சொற்றிபனசமுமாகும். . ஆ-உ.

* குன்றியின்பெயர் — குருவிந்தங் குஞ் சங்குன்றிப்பெயரே. . ஆ-உ.

* கொளிஞ்சியின்பெயர் — கோளிகொளிஞ்சி. . . . . (க.)

* நாயுரீஇயின்பெயர் — கரமஞ்சரிநாயுரீஇயென்ப. . . . (க.)

* இஞ்சியின்பெயர் — இஞ்சிநறுமருப்பல்லமென்ப. . . . ஆ உ.

கற்றாழையின்பெயர் — குமரிகற்றாழையாகக்கூறுவர். . . . (க.)

வழுதலையின்பெயர்—வங்கம்பிருகதிவழுதுணைவழுதலை. . . . ஆ ௩.

மலைச்சாரல்விளைநெல்லின்பெயர்— ஐவணமலைச்சாரல்விளைநெல்லாகும். . (க.)

குளநெல்லின்பெயர்- நீவாரங்குளநெல்.

செய்ந்நெல்லின்பெயர் — சாலிசெய்ந்நெல்லே. . . . (க.)

செந்நெல்லின்பெயர் — செந்நெல்வ்ரீகிசெஞ்சாலியாகும். . . ஆ உ.

* போரின்பெயர்-சும்மைகுவால்போர்.

அரிசியின்பெயர்— அரியேதண்டுலமரிசியாகும். . . . ஆ உ.

வேயரிசியின்பெயர் — இயவைதோரைவெனும்வேயரிசி. . . ஆ உ.

சோளத்தின்பெயர்—சொன்னலுமிறுங்குஞ்சோளமாகும். . . ஆ உ.

கருந்தினையின்பெயர்--இறடிகருந்தினை.

செந்தினையின்பெயர்-- ஏனல் செந்தினை.

* உழுந்தின்பெயர்—மாடமுழுந்தே.

* துவரையின்பெயர் -- ஆடகந்துவரை.

* காராமணியின்பெயர் — கூலவிதைகாராமணிக்கூற்றும். . . ஆ உ.

* கடலையின்பெயர்—மஞ்சூராங்கடலை.

* பயற்றின்பெயர்—மூற்கம்பயறே.

* கம்பின்பெயர்-கவலைபுல்செந்தினைகம் பாகும்மே. ஆ-ஈ.

* கோதுமையின்பெயர்—கோதி கோ துமை. (க.)

* கொள்ளின்பெயர்—குலுத்தங்காணங் கொள்ளாகும்மே. ஆ-உ.

* வரகின்பெயர்-வரகுகோத்திரவம் (க.)

அவரை துவரைமுதலாயினவற்றின்பெயர்-முதிரையவரை துவரைமுதலாயின. (க.)

விதையின்பெயர் — பரல்காழ்வீசம்வித் துவிதையாம். ஆ-ச.

எள்ளின்பெயர்—எண்ணுந்திலமுமெ ள் ளெனவிசைப்பர். ஆ-உ.

எள்ளிளங்காயின்பெயர்—கவ்வையெள் ளிளங்காயாகும்மே. (க.)

கதிரின்பெயர்—சூால்கதிராகும். (க.)

பதரின்பெயர்—பதடிபதரே. (க.)

தினைத்தாளின்பெயர் -- இருவியுமருவியு ந்தினைத்தாளாகும். ஆ-உ.

வைக்கோலின்பெயர் — வையேபலாலம் வைக்கோலாகும். ஆ-உ.

மற்றும்வைக்கோலின்பெயர் — வழுது மொர்ோவழிவையும்பெறுமே. (க.)

தாற்றுநெற்கூட்டின்பெயர்— பொங்க ழிதூற்றுநெற்கூடாகும். (க.)

பயிரின்பெயர்— பயிரேபசும்புல்பைங் கூழாகும். ஆ-உ.

புற்பிறப்பின்பெயர் — புதல்புல்லெ ன
வருபுற்பிறப்பாகும். . . ஆ-உ.

* பச்சறுகின்பெயர் — பதமுந்தூர்வை
யும்பச்சறுகாகும். . . ஆ-உ.

* இளம்புல்லின்பெயர் — சட்பமிளம்
புல். . . . (க.)

தெங்கிளர்ப்பாளையின்பெயர்-நாரி நெ
ய்யரிதெங்கிளர்ப்பாளை. . ஆ-உ.

கிழங்கின்பெயர் - மூலங்கந்தங்கிழங்கெ
னமொழிப. . . ஆ-உ.

கோற்கொடியின்பெயர்.—இலதை தயெ
னும்பெயர்கோற்கொடிக்கெய்தும். (க.)

கொடிப்பிறப்பின்பெயர்- கோற்கொடி
மென்கொடிகொடியின்பிறப்பே. ஆ-உ.

கற்பகஞ்சேர்கொடியின்பெயர்.- கற்பக
ஞ்சேர்கொடிகாமவல்லி. . (க.)

கொடியின்பெயர்—வல்லியு நூ ழி லும்
வள்ளியுங்கொடியே. . . ஆ-ரு.

மல்லிகையின்பெயர்—மல்லிகைமௌவல்.(க.)

இருவாட்சியின்பெயர்-மயிலையிருவாட்சி.(க.)

முல்லையின்பெயர்-மௌவலுந்தளவமுங்
கற்புமுல்லை. . . . ஆ-ரு.

சிறுசண்பகத்தின்பெயர்-பித்திகைசாதிகரு
முகைமூன்று,மொத்தசிறுசண்பகமாகும்மே.

மௌவலின்பெயர்—மாலதிமௌவலாகு
மென்ப. . . . (க.)

மாலதியென்னும்பெயர்—மாலதிசிறு ச
ண்பகமுமாகும்.

* மருக்கொழுந்தின்பெயர்- தமநகமரு
க்கொழுந்து. . . (க.)

கூதாளியின்பெயர் - துடிகூதாளங்கூதாளியென்ப. ஆ-உ.

கொவ்வையின்பெயர் — விம்பமுந்தொண்டையுங்கொவ்வைப்பெயரே. ஆ-உ.

* வள்ளையின்பெயர் — வள்ளைநாளிகம்.

* காக்கணத்தின்பெயர் — கன்னிகிகிணி கருவிளைகாக்கணம். ஆ-ங.

* முந்திரிகையின்பெயர்—மதுரசங்கோத்தநிகைமுந்திரிகையாகும். ஆ-உ.

* மலைப்பச்சையின்பெயர்—குளவிமலைப்பச்சை. (க.)

இசங்கின்பெயர் — குண்டலிமுத்தாபலமிசங்கெனக்கூறுவர். ஆ-உ.

* வேரின்பெயர்—சடைதூர்சிவைவேர்.

அடம்பின்பெயர்-அடம்புசேபாலிகை.

விரிதூற்றின்பெயர் — அதிரால்விரிதூறு.

பீர்க்கின்பெயர்—பீரம்பீர்க்கு. (க.)

* பெரும்பீர்க்கின்பெயர்—பெரும்பீர்க்குப்படலிகை. (க.)

பாகலின்பெயர்—கூலம்பாகல். (க.)

சிவேதையின்பெயர்-சிவேதைபகன்றை.

சீந்திலின்பெயர்-அமுதவல்லிசீந்தில். (க.)

காஞ்சொறியின்பெயர்—கண்டூரங்காஞ்சொறி. (க.)

தாளியின்பெயர்—பஞ்சிகந்தாளி. (க.)

நறையாலின்பெயர்—பகன்றைநறையாலென்னவும்பகர்வர். (க.)

வெற்றிலையின்பெயர்-நாகவல்லிதாம்புலம்வெற்றிலை. ஆ-உ.

பிரண்டையின்பெயர் — வச்சிரவல்லிபிரண்டையாகும். . . . (௧.)

அவுரியின்பெயர் — நீலியவுரி. (௧.)

சூறிஞ்சியின்பெயர் — குறிஞ்சிசகசரி. ௧.

தும்பையின்பெயர் — துரோணந்தும்பையாகச்சொல்லுவர். . (௧.)

தருப்பையின்பெயர் — குசையேதருப்பையென்னக்கூறுவர். . (௧)

பஞ்சாய்க்கோரையின்பெயர் — ஏருவைபஞ்சாய்க்கோரையென்ப. . (௧.)

வாட்கோரையின்பெயர் — செருந்திவாட்கோரை. . . . (௧.)

நாணலின்பெயர் — காசைநாணல். (௧.)

*விழற்புல்லின்பெயர்-விரணம்விழற்புல். ௧.

சுரையின்பெயர் — புற்கொடிமென்பூச்சுரையெனப்புகல்வர். . . (௧.)

நீர்முள்ளியின்பெயர் — நீர்முள்ளிமுண்டகமாகுமென்ப . . (௧.)

பாசியின்பெயர் — நாரஞ்செவிரம்பறிகஞ்சைவலம்.பாசியென்றுபகரப்படுமே. ஆ-௪.

நீர்க்குளிரியின்பெயர் — கல்காரநீர்க்குளிரியென்ப. . . . (௧)

தாமரையின்பெயர் — புண்டரீகம்பதுமநளிநஞ்சரோருக. முண்டகமம்போருகமரவிந்தம், பங்கயயம்புயம்வாரிசஞ்சலசந், கஞ்சம்வநசங்கோகநதங்கமல, முளரிநீரோருகந்திருமால்கொப்பூழ், திருமலரிண்டைசதபத்திரியென,வருபவைதாமரைவண்பெயராகும்.௨௧.

* தாமரைக்காயின்பெயர் — வராடகந்தாமரைக்காயெனவகுப்பர், . . (௧.)

*தாமரைச்சுருளின்பெயர்-சுருள்விசிவளயம். ஆ-௨.

குவளைப்பொதுப்பெயர் - உற்பலங்குவலயங்கழுநீர்குவளை. . . ஆ-௩.

† கருங்குவளையின்பெயர்—நீலோற்பலமிந்தீவரங்குவலய, நீலம்பானல்காவிகருங்குவளை, கல்லாரமுமெனக்கழறலாகும். . ஆ-எ.

செங்குவளையின்பெயர்—செங்குவளையரத்தமுற்பலஞ்செங்கழுநீர். . ஆ-௩.

குவலயமெனும்பெயர்—குவலயநெய்தலாகவுங்கூறுவர்.

செவ்வாம்பலின்பெயர்—கைரவஞ்செவ்வல்லிசெவ்வாம்பலாகும். . . ஆ-௨.

குமுதமென்னும்பெயர்—வெள்ளாம்பல்சேதாம்பலென்றிருவிகற்பமுங், கொள்பமன்னேகுமுதப்பெயர்க்கொடை.

† குமுதத்தின்பெயர்—ஆம்பனெய்தனுமல்லியுங்குமுதம். . . ஆ-௩.

அகவிதழின்பெயர்—அல்லியகவிதழ். க.

புறவிதழின்பெயர்—புல்லிபுறவிதழ். க.

பூவினுட்கொட்டையின்பெயர்—பொகுட்டேகன்னிகைபூவினுட்கொட்டை. ஆ-௨.

பூவின்வகையாவன—கோட்டுப்பூக்கொடிப்பூநீர்ப்பூநிலப்பூத், தோற்றமுடையபூவின்றொடர்பே. . . ஆ-௪.

மொட்டின்பெயர்—முகைநனைகலிகைமுகுளஞ்சினைகோரக.‡ நகைகன்னிகைபோகிலருணர்; பைம்போட்டணரிவைமலர்நதுநே. ஆ-அ.

---

† பிங்கலந்தைமுதலியவற்றிற்கருங்குவளையைக்கருநெய்தலெனவும், குமுதத்தைவெண்ணெய்தலெனவுங்கூறுவர்.

‡ நகையென்பது-அடைமொழியெனக்கொளினுமமையும்.

பூவின்பெயர்—அலர்தாரலரிபோதுவீது
~~ம்புமொட்டு~~ [illegible] ஆ-கூ.

பூங்கொத்தின்பெயர்— துணரோமஞ்சரி
வல்லரிதொத்தோ, டிணரோகுலையிவைபூங்கொ
த்தென்ப. . . ஆ-சா.

வரம்பில்லாதகல்வியிலும்படையிலுங்
கொடையிலும்பிறரைவெல்லுநரணியும்வெற்
றிப்பூவின்பெயர்—நல்லிசையம்பற்செல்வச்
சேந்தனில், வரைவில்கல்வியிற்படையிற்கொ
டையில், வெல்லுநரணிவாகைவெற்றிப்பூவே.

பழைம்பூவின்பெயர் - செம்மல்பழைம்
பூவாகச்செப்புவர். . . (க.)

மலர்த்தாதின்பெயர்— மகரந்தங்கேசர
ங்கொங்குமலர்த்தாதே. . ஆ-ரு.

பூவிதழின்பெயர்-எடுந்தோடும்பூவினிதழே.

மாலையின்பெயர்—தொடையல்வாசிகை
சிகழிகைகோதை, படலையலங்கல்கத்திகைபி
ணைய, லணியல்சுருக்கைதொடலைதாமந், தொ
ங்கறெரியல்கண்ணிதார்சூட்டு, மஞ்சரியொவி
யலிலம்பகமாலை. . . ஆ-உய.

* பின்னியமாலையின்பெயர் — பிணையல்
பின்னியமாலைப்பெயரே. . (க.)

நுதலணிமாலையின்பெயர்—சூட்டுடனில
ம்பகநுதலணிமாலை. . ஆ-உ.

வாசிகையின்பெயர்--மாலைசிகழிகைவாசிகை
தொடைய, லாகுமென்பவறிந்திசினோரே. ரு.

நாடேபிறர்நாட்டிற்குவமையாறே, காலமறிந்துதவுங்
காவிரிதானே, யாடவர்திலகனம்பன்மன்ன, னீடிசைத்த
லைவனுவந்தைச்சேந்த, னுயந்ததிவாகரத்தநம்போநள்
விளக்கு, நான்காவதுமரப்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

—ஃ—

ஐந்தாவது,

இடப்பெயர்த்தொகுதி.

* மோக்கத்தின்பெயர் — அமுதங்கேவலமபவருக்கம்வீடு, சிவங்கைவல்லியஞ்சித்தி மீளாக்கதி, பரகதியோடுமுத்திபஞ்சமகதி, நிர்வாணமோக்கமென்னநிகழ்த்தினரே. சூ. யஉ.

தெய்வலோகத்தின்பெயர் — தானந்தராக்கம்பொன்னுலகும்பர், வானகமமருலகுயர்நிலைபுத்தேள், வியனுலகுவிசும்புவிண்ணுலகு நாகம், பவநமாசுவர்க்கந்தெய்வலோகப்பெயரே. சூ. யரு.

* நாகலோகத்தின்பெயர் — பவநநாகலோகப்பாலதாம். (க.)

விஞ்சையருலகத்தின்பெயர் — சேணியுஞ்சேடியும்விஞ்சையர்சேர்விடம். சூ. உ.

திசையின்பெயர் — மாதிரமாசைவம்பறிசைப்பெயர். சூ. ரு.

மற்றுந்திசையின்பெயர் — ககுபமிசைபுலந்தேந்திக்கரிதம், விசும்புமுலகுங்கோக்காட்டையுமாம். சூ. ய.

கீழ்த்திசையின்பெயர்-குணக்கேபூருவமிந்திரிபிராசி, கிழக்குக்கீழ்த்திசைகிளக்குங்காலே. ரு.

தெற்கின்பெயர் — அவாசிதக்கணம்யாமியந்தெக்குச், சிவேணதமற்றிவைதெற்கெனலாகும். சூ. ரு.

மேற்கின்பெயர் — மேக்குப்பச்சிமங்குடக்கிவைமேற்கே. சூ. ரு.

மற்றுமேற்கின்பெயர்— வாருணம்பிரத்தியக்குமதுவே. . . ௯௨.

வடக்கின்பெயர்-உதக்கேயுதீசியுத்தரமென்ன, வடக்கின்பெயரிவைவைக்குங்காலே. ௯௩.

பூமியின்பெயர் -- அவநிகாசிநிமேதிநியளக்கர், தரணிதாரணிதராதலங்குவலயம், புடவிபூதலந்தனைப்படிஞாலம், வையமகிலங்குமண்புவிபார் † நா, டுலகுபுவநிபாரியுகநேமி, யகவிடம்பொறையரண்மண்டிலம்பூத்திணை, தலம்பொழில்பிருதிவிவேலாவலய, நிலஞ்சகந்தாலம்பூமியெனநிகழ்த்தினர். . ௯௩அ.

நரகத்தின்பெயர் — நிரயந்துருக்கம்பாதாளங்கும்பி, யள்ளலளறேயருஞ்சிறையிருணில, மெரியுந்திமிரமுமிரௌரவமென்றிவை, நரகின்பெயரொனநவிலப்படுமே. . ௯௰௧.

உலகின்பொதுப்பெயர் — புவநநாடுபொழிறலம்புடவி, பவநமுலகின்பொதுப்பெயர்பால. . . ௯௫.

நாட்டின்பெயர் — பைதிரமண்டிலம்பாண்டிறேயந், தண்ணடைசநபதமகலுள் சும்மை, கண்டமேணியுலகென்றிவைநாடே. ௯௬.

மலையின்பெயர்—விலங்கலடுக்கல்வெற்புப்பருப்பதஞ், சிலம்புநாகங்குறும்பொறைசிகரம், வேதண்டம்வேரங்கிரிதிகிரிசையம், தரணிபூதரமோங்கல்பிறங்கல், குவடுகுன்றேறிபறம்புவரைவிண்டு, போதிகோச்சிலை யிறும்புதடமாதிரம், பொச்சைநவிர்கல்லகம்பொருப்புநகமசலஞ், சாரல்சிலோச்சயஞ்சைலமலையென்ப. . . . ௯௬அ.

---

† நாடுநடுவெனவும்பாடம்.

மேருவின்பெயர்—பொன்மலைமேரு.க.

* வெள்ளிமலையின்பெயர்— வெண்மலை வேதண்டம்விசயார்த்தம்வெள்ளிமலை. ஆ-ரு.

பொதியமலையின்பெயர் - பொதியமலை மலயம். (க.)

கொல்லிமலையின்பெயர்--வல்லியம்பொருப்பேகொல்லிமலையாகும். (க.)

குன்றின்பெயர் — இறும்புபொச்சை சுவடுபதலை, பிறங்கல்பொற்றைகுறும்பொறைகுன்றே. ஆ-எ.

மலையுச்சியின்பெயர்—கோடுகொடுமுடி குவடுசிகரஞ், சிமையமைந்துமலையினுச்சி. ரு.

மலைப்பக்கத்தின்பெயர் — வாரமுந்தடமுஞ்சாரலுமலைப்பக்கம். ஆ-ரு.

பாறையின்பெயர்—அறையேபாறை.க.

துறுகல்லின்பெயர்—பொறையேதுறுகல். (க.)

மலைமுழையின்பெயர்—முடுக்கர்கந்தரமலைமுழையென்ப. ஆ-உ.

கீழறையின்பெயர்-பிலமேகீழறை. (க.)

*குகையின்பெயர்-நிகுஞ்சங்குகையாம்.

கற்புழையின்பெயர்-கண்டறைகற்புழை.

* மற்றுங்கற்புழையின்பெயர் — கற்பாழிகாண்டையுங்கருதுவரதற்கே. ஆ-உ.

கல்லின்பெயர்—சிலையேகல்லே. (க.)

திரள்கல்லின்பெயர்-உலமேதிரள்கல். க.

நுழைவாயிலின்பெயர்—நூழையுஞ்சுருங்கையுநுழைவாயிலாகும். ஆ-உ.

மலைப்பிளப்பின்பெயர் — விடர்மலைப்பிளப்பெனவிளம்பினர்புலவர். (க.)

வெடிப்பின்பெயர் - விடருங்கமரும்வெ டிப்பின்பெயரே. . . ஆ உ.

திடரின்பெயர் — திட்டைதிடரே. (க.)

சிறுதிட்டையின்பெயர் — பதுக்கைசிறு திட்டை. . . . (க.)

பாலடுத்துயர்நிலத்தின்பெயர் — பாலடு த்துயர்நிலமுாம்பெனப்படுமே. (க.)

மேட்டின்பெயர் — திட்டைதிடறுசுவல் வல்லைவன்பான், மெட்டுத்திடர்படர்குப் பை ருவால்குவை, யொட்டியபுதிஞென்றுமேடெ னவுரைப்பர். . . ஆ மிக.

பாதாளத்தின்பெயர் — ஆம்பிலம்பாத லம்பாதாளப்பெயரே. . . ஆ உ.

கடலின்பெயர் — அத்திபௌவமளக்கரா ர்கலி, யாழிபெருநீரம்பரமுந்நீ, ருப்புவீரைசக் கரஞ்சாகரம், வேலைவெள்ளமகராலயநேமி,சல நிதிவாரிகலதியலையே, பாராவாரமுததிசமுத்தி ரம், பரவையுவர்நரலைபுணரிவாரிதி, வேலாவல யங்கார்கோளோதம், வாருணஞ்சிந்துவாரமம் புராசி,கார்மலியுவரிகடலெனக்கருதுவர். ரு௫.

கடற்றிரையின்பெயர் — ஓதமும்புணரியு ங்கடற்றிரையாகும். . . ஆ உ.

புனற்றிரைப்பொதுப்பெயர் — சீகரந் தரங்கமறல்கல்லோல, மலைபுனற்றிரைக்குவரு ம்பொதுப்பெயரே. . ஆ ரு.

கடற்கரையின்பெயர் — வேலையும்பாரா வாரமுங்கடற்கரை. . . ஆ உ.

புனற்கரைப்பொதுப்பெயர் — தீரம்பா ரம்வரையணைகோடு, கூலம்வாரம்புனற்கரைப் பொதுப்பெயர். . . ஆ எ.

செய்கரையின்பெயர்—குலையுஞ்சேதுவு
ங்குரம்புஞ்செய்கரை. . ஆ-ரு.

மலைச்சாரல்வரும்யாற்றின்பெயர் —அரு
விமலைச்சாரல்வரும்யாறாகும். . (க.)

முல்லைக்கான்யாற்றின்பெயர் — கலுழியு
முயவையுமுல்லைக்கான்யாறு. . ஆ-உ.

ஆற்றின்பொதுப்பெயர் — உந்திநதிது
றைவருபுனல்குடிஞை, சிந்துவோடொலியலா
றெனச்செப்புவர். . . ஆ-எ.

கழியின்பெயர்—கானன்முரம்புகாயன்
முகங்கழி. . . . . . ஆ-ச.

கழிமுகத்தின்பெயர்-அதோமுகம்புகா
ரோடழிவில்கூடல், கழிமுகமென்றுகருதல்வே
ண்டும். . . . . ஆ-ரு.

உப்பளத்தின்பெயர்--உப்பளங்காயலுவ
ளகமளக்கர். . . . . ஆ-ரு.

காவிரியின்பெயர்—பொன்னிகாவிரி. க.

பொருநையின்பெயர்-பொருநைதண்
பொருந்தம். . . . (க.)

கந்நியின்பெயர்-குமரிகந்நியாகக்கூறுவர். க.

வையையின்பெயர்- வேகவதிவையை
யாகும். . . . (க.)

ஆன்பொருந்தநதியின்பெயர்—ஆணிவா
ணியான்பொருந்தமாகும். . ஆ-உ.

* கௌதமைநதியின்பெயர்— கோதை
கௌதமையாகக்கொள்வர். . . (க)

* கோதாவிரியின்பெயர்—விருத்தகங்
கைவிமலைகோதாவிரி. . . ஆ-உ.

* பாலயாற்றின்பெயர்—பாலிகோநதிபா
லயாறாகும். . . . . ஆ-உ.

வாவியின்பெயர்- அலந்தைபண்ணைகோட்டகங்கிடங்கோ, டிலஞ்சிதாங்கல்சுனையேல்வையோடை,வட்டந்தடாகமடுக்குளம்வலயங்,குட்டங்குண்டம்பட்டஞ்சூழி, பொய்கைகேணியாவிதடம்படுக,ரோரிகயம்பயமுவளகம்வாவி.உ௭

ஏந்திராவாவியின்பெயர்- இலவந்திகையேயெந்திராவாவி. . . . (க.)

யாற்றிடைக்குறையின்பெயர் - இலங்கையுந்துருத்தியுமெனவரும்பெயரோ, டரங்கமுமாற்றிடைக்குறையெனவறைவர். . ஆ௨ரு.

ஊருணிநீர்ப்பெயர் — ஊருணும்பொதுநீரூருணியாகும். . . (க.)

கிணற்றின்பெயர்—கூவலுமசும்புங்கூபமுங்குழியும்,பூவலுங்கேணியுந்தூவுங்கிணறே.௭.

ஊற்றலின்பெயர் — அஃகுமுறவியுமசும்புமூறல். . . . ஆ௨ரு.

நீர்க்குமிழியின்பெயர் - புற்புதமொக்குள்பௌவநீர்க்குமிழி. . ஆ௨ரு.

நுரையின்பெயர் — நுரையேபேநமாகுமென்ப. . . . . (க)

ஆழத்தின்பெயர் — அழுந்துங்குண்டுங்கயமுமாழம். . . ஆ௨ரு.

நிறைபுனலின்பெயர் - வழாறும்பிராறும்வாரியுநிறைபுனல். . . ஆ௨ரு.

நீந்துபுனலின்பெயர் — அகாதமென்பதுநீந்துபுனலாகும். . . (க.)

கொழுந்துநீரோட்டத்தின்பெயர்- கோலமென்பதுகொழுந்துநீரோட்டம். (க.)

தெளிநீரின்பெயர் — சற்சலமென்பதுதெளிநீராகும். . . . (க.)

கலங்கற்புனலின்பெயர்--விலங்கல்கலுழி கலங்கற்புனலே . . ஆ-உ.

சேற்றின்பெயர்—அள்ளலசறுேடளாக்க ரளுறு, கொள்ளமளறுகுழம்புகாலாழ், தொள் ளிபங்கம்பூழிகுழைசேறே. . ஆ-யஉ.

* மற்றுஞ்சேற்றின்பெயர்—தொய்யிரு ளியேசெதும்புசேதகஞ், செய்யலென்றிவை சேறெனத்தகுமே. . . ஆ-ரு.

வழுக்குநிலத்தின்பெயர்—அருப்பமசட மழுவம்வழுக்குநிலம். . ஆ-௬.

பொல்லாநிலத்தின்பெயர்—அசும்புமய சுமசுபாகந்தன்னுட, ணங்கணமுஞ்சகதியும் பொல்லாநிலமே. . . . ஆ-ரு.

வெண்மணலின்பெயர் - வாலுகம்வெண் மணல். . . . (க.)

மணற்குன்றின்பெயர் — புளிநமணற்கு ன்றே. . . . (க.)

நுண்மணலின்பெயர் — அதரயிர்நுண் மணல். . . . ஆ-உ.

புழுதியின்பெயர்— பொடிபூழ்திபுழுதி யாகுமென்ப. . . . ஆ-உ.

அலைகொழித்தகருநுண்மணலின்பெயர்- அறலேயலைநுண்கருமணலாகும். (க.)

ஐந்திணையாவன—மலைச்சார்புகுறிஞ்சி நிலங்,கடற்சார்புநெய்தனிலங்,காடுசார்நிலமுல் லை,நாடுசார்நிலமருத,நீரின்றிவேனிற்றெறுநில ம்பாலை. . . . ஆ-ரு.

மருதநிலத்தின்பெயர்—அகணிபண ்பண்ணைபழனங்கழனி, பானல்கம்பலைபடுகர் வயன்மருதம். . . ஆ-௬.

முல்லைநிலத்தின்பெயர் — புறவம்புறம் பணைமுல்லைநிலப்பெயர். . ஆஉ.

குறிஞ்சிநிலத்தின்பெயர்—அறைவர்குறிஞ்சிக்குமப்பெயர்தானே.

வன்பாலெனும்பெயர்-வன்பால்குறிஞ்சியும்பாலையுமாகும்.

மென்பாலெனும்பெயர்—மென்பாலென்பதுமருதமேமற்றே.

சமப்பாலெனும்பெயர் — முல்லையுநெய்தலுமொழிசமப்பாலே.

கருநிலமென்பது-மலையினீரில்வநத்தில்வந்தமற், றிணையமிகுதிச்சொற்கருநிலப்பெயரே.

துருக்கத்தின்பெயர் — அழுவந்துருக்கமாகுமென்ப. . . (க.)

ஊரின்பெயர் — பாக்கம்பட்டினம்பதிநகர்சும்மை, பூக்கஞ்சேரிபுரமுட்டம்பூண்டி, யகரங்குடியேகுறிச்சிகோசர, மகலுளுச்சியிருக்கைவேலி, குப்பம்பாடிகுறும்புபாழி, சிறுகுடிதண்ணடையுறையுளெயிலொடு, வாழ்க்கையுட்படுத்திருபத்தேழு, நாடிலூரெனநவின்றிசினோரே. . . ஆஉஎ.

நீரும்வயலுஞ்சூழ்ந்தவூரின்பெயர்—சுரந்தநீரும்வயலுஞ்சூழ்ந்தவூர், கிராமமாகக்கிளக்கப்படுமே. . . (க.)

ஐஞ்ஞூறுகுடிநிறைந்தவூரின்பெயர் — குடியைஞ்ஞூறுகுறைவறநிறைந்தது, பெருங்கிராமமெனப்பேசப்படுமே. . (க.)

மலைசூழ்ந்தவூரின்பெயர் - கிரிபலசூழவடுத்தவூர்கேடகம். . . (க.)

மலையுமாறுஞ்சூழ்ந்தவூரின்பெயர்-மலையுமாறுமடுத்தவூர்கர்வடம். . (க.)

பலபண்டம்பகருங்கடற்கரையூரின்பெயர்-பண்டம்பலகொடுபகருங்கடற்கரை, மன்னும்பதியேபட்டினமாகும். . (க.)

சிற்றூரின்பெயர் - பட்டுநொச்சியும்பள்ளியுஞ்சிற்றூர். . . . ஆரு.

குறிஞ்சிநிலத்தூரின்பெயர் - குறிச்சிசிறூர்குறிஞ்சிநிலத்தூர். . . ஆஉ.

முல்லைநிலத்தூரின்பெயர்—பாடிமுல்லைப்பதி. . . . . (க.)

நெய்தனிலத்தூரின்பெய்ர்-பட்டினநெய்தற்பதி. . . . . (க.)

பாலைநிலத்தூரின்பெயர்—முனையிடங்குறும்புமுதுபாலைநிலத்தூர். . ஆஉ.

மருதநிலத்தூரின்பெயர்-பூக்கங்குடிக்காடுபூரியமுறையுள், பாக்கமருப்பமகலுள்பதியே, கோட்டம்வசதிதாவளநியமம், வாழ்க்கைதண்ணடைமருதநிலத்தூர்ப்பெயர். ஆ௰சு.

நகரப்பதியின்பெயர்—பாடியும்பாமுநகரப்பதியே. . . ஆஉ.

சூழ்கழியிருக்கையின்பெயர்-சூழ்கழியிருக்கைகோணமுகமே. . . (க.)

மருங்கிலூர்சூழ்பெரும்பதியின்பெயர்-மருங்கிலூர்சூழ்பெரும்பதிமடப்பம். (க.)

கொடுங்குறும்பரரணிருக்கையின்பெயர்-கொடுங்குறும்பரரணிருக்கைகுறும்பென்றாகும். . . . . . . (க.)

முனைமேற்சென்றோருறைபதியின்பெயர்—பாசறைமுனைமேற்சென்றோருறைபதி.

உறையூரின்பெயர் - கோழியுறையூர். (க.)
மதுரையின்பெயர் — கூடன்மதுரை. (க.)
* சிதம்பரத்தின்பெயர்-மன்றஞ்சி தம்பரம். . . . (க.)
* திருவாரூரின்பெயர்-கமலைதிருவாரூர்.
கருவூரின்பெயர் — கருவூர்வஞ்சி. (க.)
காவிரிப்பூம்பட்டினத்தின்பெயர் — காகநதிபுகார்காவிரிப்பூம்பட்டினம். ஆஉ.
அவந்தியின்பெயர் — உஞ்சையவந்தி. (க)
காசியின்பெயர் — காசிவாராணசி. (க.)
காஞ்சியின்பெயர் — கச்சிகாஞ்சி. (க.)
மிதிலையின்பெயர் — விதேகையென்பது மிதிலையாகும். . . . (க.)
அயோத்தியின்பெயர் — விநிதைசாகேதங்கோசலையயோத்தி. . . ஆரு.
புரியெனும்பெயர் — புரியென்கிளவிபுரமென்றாகும். . . (க.)
பாடியெனும்பெயர் — பாடியென்பது சேரியாகும். . . (க)
* கடாரத்தின்பெயர் — காழகங்கடாரமாகக்கருதுவர். . . (க.)
* சிங்களத்தின்பெயர் — சிங்களமீழமாகச்செப்புவர். . . (க.)
* நெல்லும்புல்லு நிறைந்தமலையூரின்பெயர் — நெல்லும்புல்லுநிறைந்தமத்தகம், புல்லுமலையூர்சம்வாகடமாகும். . (க.)
* அரித்துவாரத்தின்பெயர்-அரித்துவாரமாயாபுரியாம். . . (க.)
கடையின்பெயர் — கூலமங்காடிகடையாகக்கூறுவர். . . ஆஉ.

மற்றுங்கடையின்பெயர் — ஆவணநியம மாகவுமுரித்தே. . . ஆஉ.

தெருவின்பெயர்—ஆவணம்வீதிரெள் ளன்மறுகு, கோசநியமமார்க்கந்தெருவே. எ.

மற்றுந்தெருவின்பெயர்-சிறகெனவொ ருவழிச்செப்பவும்படுமே. . (க.)

நெடுந்தெருவின்பெயர்—மன்றமார்க்க நியமநெடுந்தெருவே. . . ஆரு.

குறுந்தெருவின்பெயர் — குறுந்தெரு மறுகே. . . . (க.)

குதிரைவையாளிவீதியின்பெயர்—செண் டுவெளிவையாளிவீதி, புரவிவட்டந்திருமுற்ற மாகும். . . . ஆரு.

வேந்தர்வீதியின்பெயர் — பூரிபம்வேந் தர்வீதியாகும். . . . (க.)

முடுக்குத்தெருவின்பெயர் - கோணமுடு க்குத்தெருவாகும்மே. . (க.)

முச்சந்தியின்பெயர் - அந்திமுச்சந்தி.க.

சந்தியின்பெயர்- அந்திகவலைவரியேசந்தி.க.

நாற்சந்தியின்பெயர்-முந்தையோர்சது க்கநாற்சந்தியென்ப. . (க.)

சிரோணியின்பெயர்—சேடியும்வாடையு ஞ்சிரோணியாகும். . . ஆஉ.

மற்றுஞ்சிரோணியின்பெயர் — ஆலிடமெ னவுமறையப்படுமே. . (க.)

அக்கசாலையர்வீதியின்பெயர்—ஆவேசந மக்கசாலையர்வீதி. . (க.)

வேடர்வீதியின்பெயர்—பக்கணம்வேட ர் வீதியாகும். . . (க.)

* சந்தியின்பெயர்—சந்துசதுக்கம். க.

கோயிலின்பெயர் — சிநகரஞ்சேதிமந் தேவராலய, நிலயம்பாழிபள்ளிநிகேதந, மந்திரமாலயந்தேவகுலங்கோட்ட, நகர்தளிவானவருறையுள்கோயில். . ஆ௰௪.

அறச்சாலையின்பெயர்—சத்திரஞ்சாலையறச்சாலையாகும். . . ஆ௨.

ஓதும்பள்ளியின்பெயர் - அறப்புறமோதும்பள்ளியாகும். . . (க.)

ஓமமண்டபத்தின்பெயர்—சமித்தமோமமண்டபஞ்சாரும். . (க.)

மன்னரில்லின்பெயர்-சாலைமாளிகைபவநங்கோயிற், குலமுமன்னரில்லாகக்கூறுவர். ரு.

மன்னன்றேவியிருக்கையின்பெயர்—கந்தவாரமுமுவளகமுமந்தப், புரமுந்தேவியர்மனையாகுமென்ப. . . ஆ௩.

வீட்டின்பெயர் - மாடமனையுறையுள்புக்கில்பதிவசதி, யிடமேபாத்தியகம்வயினில்ல, மிடவகைசேர்வுவீடென்றிசைப்பர். ஆ௰௩.

சிற்றிலின்பெயர்—கூரைகுரம்பைகுடில்சிற்றிலாகும். . . ஆ௩.

பண்டசாலையின்பெயர்— புனைகலனிருக்கைபண்டசாலை. . . (க.)

வீட்டிறப்பின்பெயர் — வளவியிறையேவீட்டிறப்பாகும். . . ஆ௨.

தாழ்வாரத்தின்பெயர்—சோபாநந் தாழ்வாரமாகும். . (க.)

முகட்டின்பெயர்—விடங்கமுகடே. (க.)

வேயுளின்பெயர்-வேயுள்வேய்தல். (க.)

பல்கணியின்பெயர்-சாலகஞ்சாளரநூழைசாலேகம், வாதாயநம்பல்கணியெனப்படுமே. ரு.

...டைப்பள்ளியின்பெயர்—அட்டிலடுக்க
...ட்ப்பள்ளியாகும். . ஆ-உ.

கல்வியூரி-அன்றிக்கல்வியயிலிடத்தின்பெ
...ர்—கல்வியூரிகல்லூரியாகும். . (க.)

சுவர்த்தலத்தின்பெயர்—பித்திகைசுவர்
த்தலம். . . . (க.)

பீடத்தின்பெயர்—பீடிகைபீடம். (க.)

சலதாரையின்பெயர்—அங்கணந்தூம்பு
வாய்சலதாரையாகும். . . ஆ-உ.

முற்றத்தின்பெயர்—முன்றிலங்கணமுற்
றமாகும். . . . (உ.)

நிலாமுற்றத்தின்பெயர்-ஆமியநிலாமுற்
றமாகுமென்ப. . . . (க.)

திண்ணையின்பெயர் — திட்டைமன்னணிடு
தெற்றிவேதிகை, திண்ணையாகுமென்மனூர்
புலவர். . . . ஆ-ச.

கற்படுத்தபூமியின்பெயர்—கற்படுத்தபூ
மிகுட்டிமமாகும். . . . (க.)

சித்திரகூடத்தின்பெயர் — தெற்றியம்
பலஞ்சித்திரகூடம். . . (க.)

அம்பலத்தின்பெயர் - பொதியிலுமன்ற
மும்பொதுவுமம்பலம். . ஆ-ரு.

கழகமெனும்பெயர் — செல்லறீர்க்கும்
பல்புகழ்ச்சேந்தனில், வல்லுநர்நாவலர்வாய்ந்
தவிடமு, மல்லுஞ்சூதம்பலடையுமற்றுங்,கல்வி
பயில்களமுங்கழகமாகும்.

ஆசிருக்கையின்பெயர்—ஆசிருக்கைப்
பெயராத்தாணிவேந்தவை. . ஆ-உ.

ஆங்கமெனும்பெயர்—போரினிடமும்
வட்டாடிடமு, மாடவிட்டுமவையுமரங்கம்.

ஒருசிறை-அல்லது-ஒதுக்கிடத்து
ர்—ஒருசிறைதுச்சில். .

ஏகாந்தத்தின்பெயர் - ஒருவந்தமே
தங்கொட்டில்வேறிடம். . ஆ

கர்படையின்பெயர்-சுருங்கைகற்படை
யாகுமென்ப. . . (க.)

உறைவிடத்தின்பெயர் — ஆகரம்பிறப்பி
டமுறைவிடமாகும். . . ஆ உ.

அடுப்பின்பெயர்-குமுதஞ்சுல்லிகாமரமடுப்
பு, முத்தாநமெனவுமொழியப்படுமே. ஆ ச.

கூட்டின்பெயர் - குடம்பைபஞ்சரங்கட்
சிகூடாகும். . . ஆ ரு.

பண்ணுங்கூட்டின்பெயர் — குலாயநம்
பஞ்சரம்பண்ணுங்கூடே. . ஆ உ.

குதிரைப்பந்தியின்பெயர்—மந்திரஞ்சா
லைகுதிரைப்பந்தி. . . ஆ உ.

யானைசேர்விடத்தின்பெயர் — நீடியவா
ரியுஞ்சேவகமுந்தண்டமுங், கூடமுமோளியும்
யானைசேர்விடம். . . ஆ ரு.

யானைசெல்வழியின்பெயர்-தண்டம்யா
னைசெல்வழியென்ப. . . (க.)

யானைத்துயிலிடத்தின்பெயர்—சேவகம்
யானைத்துயிலிடமாகும். . (க.)

மக்கட்கிடப்பிடத்தின்பெயர் — கட்சிய
மளிசேக்கையுறையுள், சட்டகஞ்சேர்விடம்
பள்ளிசயநம், பட்டம்பாழிபாயலரிதுயிலிட,
மொட்டியவுயர்திணைக்கிடப்பிடமாகும். யரு.

விலங்குதுயிலிடத்தின்பெயர்—பட்டம்
போத்துப்பண்ணைசேக்கை, விலங்குதுயிலுமி
டமாகுமே. . , ஆ ச.

...ள்விக்குண்டத்தின்பெயர்—வேதியு
...மம்வேள்விக்குண்டம். . ஆ-உ.

முநிவர்வாசத்தின்பெயர்—தாபதம்பா
...கரண்டைப்பள்ளி, முநிவர்வாசமெனமொழி
யப்படுமே. . . . ஆ-ச.

மட்கலஞ்சுடுமிடத்தின்பெயர் — சூள்ளை
யுஞ்சூளையுமட்கலஞ்சுடுமிடம். . ஆ-உ.

சுடுகாட்டின்பெயர்—சுடுகாடுமமயானஞ்
சுடலை, சுடுநிலம்புறங்காடிடுகாடுமுதுகாடு, வந
மெரிவநம்பிதிர்வநம்பிணக்காடே. ஆ-௰௧.

பொருகளத்தின்பெயர் —களரிபறந்தலை
செம்புலம்படுகளம், பொருகளங்களமெனப்
புகன்றனர்புலவர். . . . ஆ-ரு.

வழுக்குநிலத்தின்பெயர்—அருப்பமாறி
டமளுரிழுக்குவழுக்குநிலம். . ஆ-ச.

தொழுவத்தின்பெயர்—தொழுவமாவே
லிதோழமானிலையே. . ஆ-௩.

மதிலின்பெயர் — இஞ்சிநொச்சியெயில்
சுற்றுப்புரிசை, பந்தம்வரைப்புக்காப்பரண்கா
வ, லாரலோதைபிராகாரம்வேலி, சீர்சாலம்வே
ணகைமதிலெனச்செப்புவர். ஆ-௰௬.

மற்றுமதிலின்பெயர்—வஞ்சிறையுவளக
மாகலும்வரையார். . . ஆ-உ.

மதிலுளுயர்மேடையின்பெயர்-பரிகமக
ப்பாப்பதணமூன்று, முரியமதிலுளுயர்மே
டைக்கே. . . . ஆ-௩.

மதிற்சுற்றின்பெயர்—தொடையுந்தகை
ப்பும்வாரியுஞ்சுற்றே. . ஆ-௩.

மதிலுறுப்பின்பெயர் — பதப்பாடெந்
திரங்கோசந்தோணி,விதப்புஞாயிறுஞ்சின்மதி
லுறுப்பே. . . ஆ-எ.

அகழின்பெயர்— அகழிகிடங்
பரிகமகழே. . .

குதிரின்பெயர்—புகல்குதிராகும்.

வாயிலின்பெயர்—தோட்டிதுவாரம்வா
கடைவாயில். . . . ஆ ச.

கோபுரம்-அல்லது கோபுரநிலையின்பெய
ர்—சிகரிகோபுரம். . . (க.)

பெருவாயிலின்பெயர்—கோபுரமென்ப
து பெருவாயிலாகும். . (க.)

கோபுரவாயிற்புகுபுழையின்பெயர்—
புதவுவாயிற்புகுபெரும்புழையே. . (க.)

கோபுரவாயிற்றிண்ணையின்பெயர்—அளி
ந்தமவ்வழிச்சார்திண்ணையாகும். . (க.)

கோபுரவாயிற்படிச்சுருளின்பெயர்-அத்
திரகம்வாயிற்படிச்சுருளாகும். . (க.)

வயலின்பெயர்-விளையுளும்பண்ணையுஞ்
செய்யுங்கழனியுந், தடியும்பாத்தியுஞ்செறுவு
ம்வயலே. . . . ஆ எ.

சிறுசெய்யின்பெயர் — குண்டில்பாத்தி
சிறுசெய்யாகும். . . ஆ உ.

புனத்தின்பெயர்—குறிஞ்சிநிலச்சார்புங்
கொல்லையும்புனமே. . ஆ உ.

தினைப்புனத்தின்பெயர்— ஏனலும்வளா
கமுந்தினைப்புனமென்ப. . ஆ உ.

பழைங்கொல்லையின்பெயர் — முதைப்
புனம்பழைங்கொல்லை. . (க.)

புதுக்கொல்லையின்பெயர்—இதைப்புன
ம்புதுக்கொல்லை. . . (க.)

தோட்டத்தின்பெயர்— தோட்டந்துட
வைபடப்பையிம்மூன்றுந், தோட்டப்பெய
ரெனச்சொல்லினர்புலவர், . ஆ ௩.

[...]வின்பெயர்— துடவைதொய்யிலுழ
[...]டியயடோ. . . ஆ-உ.

உழுதொழில்வளப்பின்பெயர்— தொடு
[...]பேயுழுவோர்தொழில்வளப்பாகும். (க.)

புதுவரம்பின்பெயர்-மரிசிபுதுவரம்பு.க.

புற்றின்பெயர்—வன்மீகப்புற்று. (க.)

வரம்பருகின்பெயர்--கந்குவரம்பருகே.

பள்ளத்தின்பெயர்— உவளகம்பயம்பே யவல்குழிதாழ்வே, யிழிவுகிழக்குப்படுகர்பள் ளம். . . . ஆ-அ.

புற்றஞ்சோற்றின்பெயர்— குரும்பிபுற் றஞ்சோறே. . . . (க.)

முதுநிலத்தின்பெயர்-களரிகரம்பேபெ ரும்பாழ்முதுநிலம். . ஆ-ரு.

வழியின்பெயர்—சரிநெறியொழுக்கந் தாரையாறு, வதியதர்மார்க்கமியவை நடவை, பதவைசெப்பமயனமிடவை, வாரிவட்டைவரி வயவைவகுந்து, செலவுசிறுபதம்வழிக்கிளவி யாகும். . . . ஆ-உக.

அருநெறியின்பெயர்—வுத்தங்கடங்கறு தூம்புசுரமருநெறி. . . ஆ-ரு.

கவர்த்தநெறியின்பெயர்-- கவலைகவர்த் தநெறியெனக்கருதுவர். . (க.)

சிறுவழியின்பெயர்- விடங்கர்சிறுவழியா குமென்ப. . . (க)

*பெருவழியின்பெயர்-பாதைபெருவழி.க.

இழிந்தேறப்படிவழியின்பெயர்— படுக ர்மடுவிழிந்தேறப்படிநெறி. . ஆ-உ.

கரபடியின்பெயர்-ஆரோகணஞ்சோபா நங்கர்படி. . . . ஆ-உ.

நீள்வழியின்பெயர்-அளக்கர்நீள்...

இடத்தின்பெயர்--வாய்புலம்பாங்க...
ண்களம்வைப்புதி, தேயம்வழியுழிதிணையேட...
ங்கு, பாணிலந்தலமேவளாகம்பட்டி,சூழருநட...
டப்பெயர்த்தொடர்பே. . ஆ௰அ.

மற்றுமிடப்பொதுப்பெயர்-கண்கால்புறமக
முள்ளுழைகீழ்மேல்,பின்சாரயல்புடை † தேவ
கையெனுஅ,முன்னிடைகடைதலைவலமிடமெ
னுஅ,வன்னபிறவுமதன்பாலவென்மனார். ௰௧.

பக்கத்தின்பெயர்-மாடுசிறையுழிமருங்குஞா
ங்கர்முன்,பால்புடைபாங்கர்பக்கமாகும். ௧.

நடுவின்பெயர்—நனந்தலைநாப்பண்மத்
திமநள்ளு, வயங்கிடையொத்தனுவோடணவு,
நலந்திகழ்கூழையுநடுவென்றாகும். . ஆ௧.

* உயர்ச்சியின்பெயர்—உம்பர்மீப்புல
ம்வலமே‡யோக்கந்,துங்கமுவணம்பருமமுந்
தி, மேடுமோடுதூக்குமேக்கு, நிவப்பிவையுய
ர்ச்சியாகநிகழ்த்துவர். . ஆ௰௫.

ஞாங்கரெனும்பெயர்—ஞாங்கர்முன்னுமே
லுமாகும்.

முன்னரின்பெயர்—முதலுந்தலைத் தா
னுமுன்னராகும். . . ஆ௨.

இம்பரெனும்பெயர்—இம்பரிவணை.

உம்பரெனும்பெயர்—உம்பருவணை.

ஆண்டென்னும்பெயர்-ஆண்டவ்விடம்.

ஈண்டெனும்பெயர்—ஈண்டிவ்விடம்.

கூப்பீடுதூரத்தின்பெயர்— எல்லைகுரோ
சங்கூப்பீடுதூரம். . ஆ௨.

---

† தேவகை-என்பதுதிசைக்கூறு. ‡ ஊக்கம்-என்பதுஉம்பாடம்.

…ாழிப்பறவையளவின்பெயர்-கிாவுஞ்
…ழிப்பறவையளவாகும். . (க.)

யோசனைதூாத்தின்பெயர்—புகையோ
…றையாம். . . . (க.)

காதத்தின்பெயர்—காவதங்காதமாகக்
கருதுவர். . . . (க.)

…ஒருவர்கொருவணுகியுதவியும், பரிசின்மாக்கள்
…பர்பலராயினுந், தானொருவன்னேதரணிமாந
…வன், செந்தமிழ்ச்சேந்தன்றெரிந்ததிவாகரத்,
…தைந்தாவதிடப்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

ஆருவது,

பல்பொருட்பெயர்த்தொகுதி.

பொன்னின்பெயர் — ஆடகமாசையீழ
மேம, மாடுகாணங்கநகந்தமநியம், வெறுக்கை
சொன்னம்பொருளோடரியே, யீகைநிதியே
கருந்தநங்காஞ்சநம், பீதகமாடைதொடுக்க
மருத்தஞ், சாமீகரம்பூரிசந்திாமாழை, நிதாந
ந்தேசிகஞ்செந்தாதுவித்தந், திாவியம்வேங்
கைசாம்பூநதமுறை, சாதருபம்முடல்பண்ட
மிாணியம், பொலமென்றின்னவைபொன்னெ
னப்படுமே. . . ஆறுள.

ஐவகையுலோகமாவன - பொன்னும்வெ
ள்ளியுஞ்செம்புமிரும்பு, மன்னவீயமுமைவ
கையுலோகம். . . . ஆறு.

ஏழுவகையுலோகமாவன-தராவெ...
சந்தானுங்கூட்டி, யெழுவகையுலோகமெ...
வும்படுமே. . . உ. ஆ...

நவமணி-கடவுண்மணியின்பெயர்- நவம
ணிகடவுண்மணியென்றிவற்றி, ணிகழ்பெயர்நி
தியுநிதாநமுமெனப. . . (க.)

* பொர்காசின்பெயர்-காணம்பொர்காசே.

மணிப்பொதுப்பெயர்—மணவுங்காசு
மணியின்பொதுப்பெயர். . ஆ-உ.

அகன்மணிப்பொதுப்பெயர் — அரதந
ஞ்சலாகையகன்மணிக்காகும். . ஆ-உ.

மாணிக்கத்தின்பெயர்—மாமணிபதும
ராகமாணிக்கம். . . ஆ-உ.

முத்தின்பெயர்-நித்திலந்தரளமாரமுத்தே.ரு.

தரளமெனும்பெயர்— தரளந்திராட்சியா
கவுஞ்சார்றுவர்.

பவளத்தின்பெயர்-வித்துருமந்துகிர்துப்பே
யரத்தமொத்தபிரவாளந்துவரிவைபவளம்.ரு.

* மரகதத்தின்பெயர்—அரிபச்சைமரக
தமரதகமுமாகும். . . ஆ-ரு.

* வச்சிரமணியின்பெயர்-வச்சிரம்வயிரம்.

* வைடூரியத்தின்பெயர் — வாலவாயம்
வைடூரியமே. . . (க.)

* நீலமணியின்பெயர்-மணிநீலமணியே.

சங்கநிதியெனும்பெயர்— செங்கைநிதி
யம்பர்சேந்தன்செங்கையிற், சங்கின்வடிவின
துசங்கநிதியே.

பதுமநிதியெனும்பெயர்-தேமலரலங்கர்சே
ந்தன்செங்கையிற்றுமரைவடிவினதுபதும
நிதியே.

...பதினுன்குவகையின்பெயர் - பதினல் ...ந்திரியமெனப்படும். (க.)

பண்டாரத்தின்பெயர் — கோசந்தண்ட ...பண்டாரமாகும். ஆ. உ.

வெள்ளியின்பெயர் — இாசதந்தாரங்கள தௌதம்வெள்ளி. ஆ. ௩.

வெண்கலத்தின்பெயர் — கஞ்சம்வெண் கலமாகக்கருதுவர். (க.)

பித்தளையின்பெயர் — மாயாபுரியாரகூட ம்பித்தளை. ஆ. உ.

செம்பின்பெயர் — சீருணந்தாம்பிரஞ் சுர்பஞ்செம்பே. ஆ. ௩.

இரும்பின்பெயர் - கருந்தாதுமயமுமிரு ம்பெனக்கருதுவர். ஆ. உ.

* எஃகின்பெயர் — சத்திஎஃகே. (க.)

ஈயத்தின்பெயர் - வங்கமுஞ்சீருளுமீயமாகும்.

காரீயத்தின்பெயர் — நாகங்காரீயமாகக் கருதுவர். (க.)

தராவின்பெயர் — மதுகந்தராவெனவை க்கப்படுமே. (க.)

இரும்புள்வாங்குங்காந்தமணியின்பெயர் — வலித்திரும்புள்ளேவாங்குங்காந்தஞ், சொலத் தகுஞ்சலாகைசும்பகமென்ப. ஆ. உ.

சந்திரொளியிற்றண்ணீர்காலுமணியின் பெயர் — சந்திரொளியிற்றண்ணீர்காலமணி, சந்திரகாந்தமெனப்பெயர்சாரும். (க.)

---

† பதினுன்குவகையாவன - உலோகமைந்துமணியொ ன்பதுமாம்.

சூரியனொளியிற்றீக்காலுமணியின் ...
சூரியனொளியிற்றீக்கால்சலாகை, சூரிய...
மெனப்பெயர்சொல்லும். . (...

பளிங்கின்பெயர் — படிகம்பளிங்குபரு
க்கைகாழாகும். . . . ஆ-ரு.

சங்குமணியின்பெயர்-அக்குச்சங்குமணி
யாகுமென்ப. . . . (க.)

பலகறையின்பெயர்-வடிகவடிபலகறைசோ
கி, வெள்வரியலகெனவிளம்பவும்படுமே. (ரு.)

பலபண்டத்தின்பெயர்— பண்ணியங்கூ
லம்வளமேபண்டம், பண்ணிகாரம்பலபண்ட
ப்பெயரே. . . ஆ-ரு.

அரும்பண்டத்தின்பெயர்—அரும்பண்
டப்பெயர்தாரமென்றாகும். . (க.)

கருப்பூரத்தின்பெயர்-கருப்பூரம்பாளிதம்.

கத்தூரியின்பெயர் - கத்தூரிமான்மதம்.

நால்வகைச்சாந்தின்பெயர் - பீதங்காலே
கம்வட்டிகைபுலியென, நால்வகைச்சாந்தினும
மாகும். . . . ஆ-சு.

சாந்தின்பொதுப்பெயர்— கலவைச்சே
றுங்காலேகவண்ணமுந், தளமவிரைகளபமுஞ்
சாந்தின்பொதுப்பெயர். . ஆ-ரு.

செஞ்சாந்தின்பெயர்—குங்குமஞ்செஞ்
சாந்து. . . . (க.)

பூசுவனவற்றின்பெயர்-அங்கராகம்பூசுவன.

மயிர்ச்சாந்தின்பெயர்— தகரமேலங்கா
சறைமயிர்ச்சாந்தே. . ஆ-ரு.

செறிகுழம்பு அல்லதுசந்தனக்குழம்பின்
பெயர்—தேய்வையுஞ்செச்சையுஞ் செறிகுழ
ம்பாகும். . . . . ஆ-உ.

PAGE NO- 97 TO 100 MISSING IN ORIGINAL

வெண்ணெய்யின்பெயர் - ஐயங்கவீநநவ
நீதம்வெண்ணெய். . . ஆ. ௨.

தேனின்பெயர் - பிரசமும்மதுவுந்தேனெ
னப்பேசுவர். . . ஆ. ௨.

சருக்கரையின்பெயர் - கட்டியும்விசயமு
ங்குளமுங்கன்னலு, மொட்டியபாகுமக்காரமு
ஞ்சருக்கரை. . . ஆ. ௬.

கண்டசருக்கரையின்பெயர் - கண்டம்பா,
ணிதங்கண்டசருக்கரை. . ஆ. ௨.

மற்றுங்கண்டசருக்கரையின்பெயர்-உண்
டையயிர்புலலகண்ட மொருவிகற்பம். ஆ. ௫.

கள்ளின்பெயர் - இச்குநறவுதேன்முருகு
தொப்பி.நறவுபிரசந்தணியல்சுரைபடு, வேரிம
ட்டுத்தேறல்சாறு,பாதம்வடிபிழிமதுவழிதொ
ண்டி, யானவரிட்டமுஞ்சாதியுங்கள்ளாம். ௨௨.

மற்றுங்கள்ளின்பெயர்-அருகிக்கௌவை
யும்விளம்பியுமாகும். . ஆ. ௨.

மற்றுங்கள்ளின்பெயர்— பாலிசுமாலியா
விமருட்ட, மாவிமுண்டகஞ்சாவிமாரி, பாடவி
மௌவிசிக்கர்ஞாளி, பாணருந்திமதுகரஞ்சுவி
கை, யாசவமாம்பலம்பியம்பதை, மேதைகஞ்
சாவிகுணிசுலோகி,பேதவகைக்கட்பெயரென
வறைவர். . . . ஆ. ௨௪.

பாநமென்னும்பெயர்—பாநம்பருகுவ
னவெவற்றிற்கும்பெயரே.

அமிழ்தின்பெயர்—அமிழ்தின்பெயரே
மருந்தெனலாகும். . . (௧.)

நஞ்சின்பெயர்-ஆலங்காரிகடுவிடநஞ்சே. ௪.

உண்பனவற்றின்பெயர்-துற்றியுண்பன. ௧.

தின்பனவற்றின்பெயர்—திற்றிதின்பன. ௧.

இலைநுகர்விலங்கினுணவின்பெயர் - இலை
நுகர்விலங்கினுணவுகுளமென்ப. . (௧.)

பறவையுணவிற்குமொருசார்விலங்கினு
ணவிற்கும்பெயர் - பறவைக்குமொருசார்வில
ங்கிற்கும்முணா, விரையுமுண்டியுமெனப்பெய
ர்பெறுமே. . . ஆ.உ.

ஒழிபொருளின்பெயர்—மிச்சிலெச்சிலு
ச்சிட்டமொழிபொருள். . ஆ.௩.

துணைக்காரணத்தின்பெயர்-துப்பேசா
தநந்துணைக்காரணமாம். . ஆ.உ.

மற்றுந்துணைக்காரணத்தின்பெயர் - ஒக்
குமதற்கேயுபகரணப்பெயரே. . (௧.)

இரண்டின்பெயர்-உபயமுமுகளமுமோ
ரிரண்டாகும். . . ஆ.உ.

பேய்த்தேரின்பெயர் — வெண்டேர்கா
னல்பேய்த்தேராகும். . ஆ.உ.

சல்லியின்பெயர்—துணையறைதூக்கஞ்
சல்லியாகும். . . ஆ.௩.

அலகெனும்பெயர்-மகிழின்பர்வுநெல்லின்
மணியு, மனையவையலகெனும்பெயரவாகும்.

நிரையின்பெயர்-ஒளியும்பந்தியுமொழு
ங்குநிரையாகும். . . ஆ.௩.

வருநற்கங்கைவடதிசைப்பெருமையுந்,
தென்றிசைச்சிறுமையுநீக்கியகுறுமுநி,குண்டி
கைப்பழைம்புனற்காவிரிப்பெரும்பதி, யம்ப
ர்கதிபதிசேந்தன்றிவாகரத், தாருவதுபல்பொ
ருட்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

எழாவது,
செயற்கை

வடிவப்பெயர்த்தொகுதி.

செயற்கைவடிவாவன — எண்ணியவெழு வகையுலோகத்தின்மரத்தின், மண்ணிற்றோலி னாவின்மற்றுந், திண்மைசெய்வடிவேசெயற் கைவடிவாகும்.

சூலப்படையின்பெயர் — கழுமுண்மூவி லைவேன்முத்தலைகழுச்சத்தி, வருபவைசூலப் படையெனவழங்கும். ௯௫.

மழுவின்பெயர்-பரசுகணிச்சிநவியந்தண் ணம், பாலமென்றைந்துமழுவின்பெயரே. ௫.

சக்கரத்தின்பெயர்-திகிரிநேமியாழிவளையெ ஃகஞ்,சுதரிசநம்பரிதிசக்கரத்துறுபெயர். எ.

வில்லின்பெயர் — சிலைதநுவேணுக்கரார்மு கஞ்சாப, முனியேசார்ங்கஞ்சராசநம்பிநாகங், கோதண்டந்தவர்கொடுமரந்துரோணம், வாரி வில்லென்பமதிநூற்புலவர். ௯௰௫.

சிவன்வில்லின்பெயர் - பிநாகம்பிஞ்சகன் பெருஞ்சிலைப்பெயரே. (௨.)

மாயோன்வில்லின்பெயர் — சார்ங்கமா யோன்றநுவின்பெயரே. (௧.)

அம்பின்பெயர்-பகழிவாளிவண்டுபாண, நிகழ்சரம்பத்திரிசிலீமுகம்பல்லம், புங்கங்கணை குதைகங்கபத்திர, மத்திரந்தோணிகோல்விசிக மம்பே. ௯௰௪.

அம்புத்தலையின்பெயர்-உடுவம்புத்தலை.

மொட்டம்பின்பெயர் — உதண்மொட் டம்பே. (௧.)

அம்பின்குதையின்பெயர் — புங்கமம்பி ன்குதை. . . . (க.)

அம்புக்கட்டின்பெயர்-புதையம்புக்கட்டே.

வேலின்பெயர்—சத்தியெஃகமுடம்பிடிகு ந்தம், விட்டேறாணஞாங்கரயிலவேல். ஆ-அ.

கைவேலின்பெயர்--கப்பணந்தோமரங் கைவேல்விகற்பம். . . ஆ-உ.

வச்சிராப்படையின்பெயர்-சம்பம்வயிரப் படைகுலிசம்வச்சிரம். . . ஆ-ரு.

வாளின்பெயர்-நாந்தகங்கட்கநவிரோதிக ண்டக, மேய்ந்தவேணுவஞ்சநாட்டங், கடுத்த லையுவணிகரவாளங்கோணமோ, டடுத்தன்வசி யேவாளெனவறைவர். . ஆ-௰ரு.

ஈர்வாளின்பெயர்—வேதிநங்கரபத்திர மிவையீர்வாள். . . ஆ-உ.

றம்வேரியோடணங்காட்டு. . . ஆ-ரு.

வெறுக்கையென்னும்பெயர் — வெறுக்
கைசெல்வமும்விழுப்பொருளுமாகும். ஆ-உ.

வேயென்னும்பெயர்—வேயேமூங்கிலு
மொற்றுமாகும். . . ஆ-உ.

வேலனென்னும்பெயர்—வேலன்முருக
ன்வெறியாட்டாளன். . ஆ-உ.

வேலியென்னும்பெயர்— வேலிமதிலுங்
காவலுமாகும். . . . ஆ-உ.

வேலையென்னும்பெயர்—வேலைதானே
கடலுங்கடற்கரையுங், காலமுங்கூறுங்கருவிய
தாகும். . . . ஆ-ரு.

வேளாண்மையென்னும்பெயர்-வேளா
ண்மையுபகாரமீகையும்விளம்பும். . ஆ-உ.

ஆதியிற்பொருண்முற்றிற்று.

அந்தத்துப்பொருள்.

அணங்கென்னும்பெயர்-தெய்வமுந்தெய்வத்துவமைமாதரு, மையலுநோயும்வருத்தமுங்கொலையு, மையமென்றுரைக்குமணங்கென்கிளவி. . . . ஆ௭.

அரியென்னும்பெயர்-கண்வரிகடல்பொன்கிண்கிணிப்பெய்பர, னன்னிறங்குதிரைதவளைசூங்கு,பகைவாள்சயநம்வலிவண்டம்பு, புகையெனப்பதினைந்துமரியெனப்புகல்ப. ௧௫.

மற்றுமரியென்னும்பெயர்-சிங்கந்திருமாறிரியிரவி, யிந்திரன்காற்றேயமனேயங்கியென்றங்கண்வடமொழிச்சிதைவினரியாகும். ஆ௮.

அளகமென்னும்பெயர்—மாதர்மயிரையுமாவின்முள்ளையு, நீரையுமளகமெனநிகழ்த்துவரே. . . . ஆ௩.

அளக்கரென்னும்பெயர்—கடலுநிலனுஞ்சேறுமளக்கர். . . ஆ௩.

அளியென்னும்பெயர்—வண்டின்பெயருமதுவுங்கொடையு, மன்புங்கூறுமளியென்கிளவி. . . . ஆ௪.

ஆணையென்னும்பெயர்—எவன்மெய்ப்பாடிலாஞ்சனைசூளே, யாவயின்விறல்செயலுமாணைக்கிளவி. . . ஆ௫.

ஆமென்னும்பெயர்-சந்ததமாலைபூணுத்திருத்தெள,வந்தனவைந்துமாரமாகும். ௫.

ஆற்றலென்னும்பெயர்—வலியுஞ்செயலும்வல்லாராற்றலு, மளவினையுமுரைக்குமாற்றற்கிளவி. . . ஆ௪.

இடியென்னும்பெயர்—தகாமுஞ்சுண்
ணமுந்தருப்பணப்பிண்டியு, மினையவையிடி
யெனவிசைத்தல்வேண்டும். . ஆ-௩.

இதழென்னும்பெயர்—பூவின்றோடும்
பனையிதழ்போல்பவும், வாயினதரமுமிதழெ
னவைப்பர். . . . ஆ-௩.

இராகமென்னும்பெயர்-கீதமுநிறமுஞ்
செந்நிறக்கெழுவு,மாதரவுமுடுகியதுமிராகமெ
னப்படுமே. . . ஆ-௫.

இவர்தலென்னும்பெயர்—சேறலுமெ
ழுச்சியுஞ்செலுத்தலும்விரும்பலு, மேறலுமி
வர்தற்கிளவிகூறும். . . ஆ-௫.

இறும்பூதென்னும்பெயர்-வியப்பிராசிவஞ்
சிறுதூறுமலையென,நயப்புடைநானகுமிறும்
பூதாகும்.

உலவையென்னும்பெயர்-மரத்திற்கோ
டுமருப்புங்காற்று, முணர்த்துமென்பவுலவை
க்கிளவி. . . . ஆ-௩.

உறையென்னும்பெயர்—நீர்முதலாகிய
துளியுமருந்துமுத,ஞெய்நீக்கியின்பங்கொடுக்
கும்பொருளுங்,கூறைமாசுகழுவுவர்நீரும், பா
லுறுபிரையுங்காரமுமொழுகலு, மோரிடைச்
சொல்லுமுறையென்ற்குரிய. . ஆ-அ.

உளக்கமென்னும்பெயர்-வண்மையுமுய
ற்சியுமநத்தின்மிகுதியு, முண்மையுமூனாக்கு
மூக்கக்கிளவி. . . ஆ-௪.

ஊர்தியென்னும்பெயர்—தேருமாவுஞ்
சிவிகையுமென்றிவை, யூர்தியென்னும்பெயரி
ற்றோன்றும். . . ஆ-௩.

எகினமென்னும்பெயர்-கவரிமாவுமன்னமு
நாயு, மெகினமென்பரியல்புணர்ந்தோரே. ௩.

எமமென்னும்பெயர்-சேமங்காவலின்பமிர
வுபொன்,னேமாப்புமயக்கமேமமாகும். ௭.

ஒதியென்னும்பெயர்-மாதர்மயிருமாலையு
மன்னமு,மோதியென்பருணர்ந்திசினோரே. ௩

ஒரியென்னும்பெயர்-ஆடவர்மயிருமுசு
வுமோரி. . . . ஆ௨.

ஒளையென்னும்பெயர் —கூட்டமுமகளி
ர்விளையாட்டுமிராசிக்,கூற்றையுமோளைக்கிளவி
கூறும். . . . ஆ௩.

கடியென்னும்பெயர்—வாசமும்பேயு
மணம்புணர்வுமென்றிவை, காசின்றுணைக்குங்
கடியென்கிளவி. . . ஆ௩.

கட்சியென்னும்பெயர்-காடுங்கூடுங்கட்
சியாகும். . . ஆ௨.

கட்டளையென்னும்பெயர்— நிறையறிக
ருவியுமுரையறிகருவியும், பிறவினையொப்புங்
கட்டளைப்பெயரே. . . ஆ௩.

கண்டகமென்னும்பெயர்-சுரிகையுடை
வாண்முள்ளிவைமூன்றுங், கருதிற்கண்டகமெ
ன்னக்கருதுவர். . . ஆ௩.

கம்பலையென்னும்பெயர்-இன்னாங்கோ
சைநடுக்கமச்சங், கன்னித்தமிழோர்கம்பலை
யென்ப. . . . ஆ௩.

கரணமென்னும்பெயர்-சொல்லியமுத
ற்பொருட்டுணைக்காரணமும், பல்வகையாடலு
மநத்தின்பகுதியுங், கல்வியுமெண்ணுங்கரண
மென்றாகும். . . . ஆ௫.

கருங்கையென்னும்பெயர்—கொன்று வாழ்தொழிலினும்வன்பணித்தொழிலினுங், கன்றியதொழின்மைகருங்கையெனப்படும்.

கருவியென்னும்பெயர்-கவசம்பல்லியந்தொடர்பியாழ்படைக்கலங்,கநகமுதற்பூண்டொகுதிமேகங்,கல்லணையுபகரணங்கழறுங்கருவி. ௰.

கழலென்னும்பெயர்-காலினடியுங்காற்றொடுதோலுங்,காலினணியுங்கழலெனக்கருதுவர். ௩.

கழுதென்னும்பெயர்—வண்டும்பேயுமிதணமுங்கழுதாம். ஆ௩.

களமென்னும்பெயர்—மிடறுபொருநிலங்கருமையிம்மூன்றுங், களமென்றுரைப்பர் கருதுங்காலே. ஆ௩.

களரியென்னும்பெயர்—கருமஞ்செய்யிடமுங்களமும்பொருநிலனுங், களரியென்பர் கற்றுணர்ந்தோரே. ஆ௩.

களனென்னும்பெயர்-பொய்கையுந்தொடர்புமருதநிலனே, டெய்தியகளனொடுநான்குங் களனே. ஆ௪.

கறையென்னும்பெயர்—நிறமுமுதிரமுமுரலுந்திறையுங், கறையென்கிளவியாமெனக் கருதுவர். ஆ௪.

கன்னலென்னும்பெயர்—சருக்கரைகரகநாழிகைவட்டி, லுரைக்கிற்குடமுநாழிகையுங் கன்னல். ஆ௫.

காஞ்சியென்னும்பெயர்-எதிரூன்றுதலு நிலையின்மையுமா, மணிமேகலைப்பொருமரப் பெயருங்,கருதுங்காஞ்சியென்னுங்கட்டுரை. ௪

காரியென்னும்பெயர்—ஆலநஞ்சேசநிக்கோண்மாசாத்த, னிருணிறத்தனவுங்காரி யெனப்படுமே. ஆ௬.

காரிகையென்னும்பெயர்—அழகுமழகுடைமாதருமதனொடு,கட்டளைக்கலித்துறையுங்காரிகையென்ப. . . ஆ-௫.

காழென்னும்பெயர்-கொல்பரல்சேகுமணியின்கோவை, மாலையுமொளியுங்காழென்றாகும். . . . . ஆ-௬.

கிழியென்னும்பெயர்-எழுதுபடமுமிருநிதிப்பொதியுங், கிழிபடுதுகிலுங்கிழியெனற்குரிய. . . . ஆ-௫.

குயமென்னும்பெயர்-அரிவையர்முலையுங்கொடுவாளுமிளமையுங்,கருதிவிம்மூன்றுங்குயமெனக்கருதுவர். . ஆ-௫.

குவலயமென்னும்பெயர்—நெய்தலுநிலனுங்குவலயமென்ப. . ஆ-௨.

குளிரென்னும்பெயர்—கிளிகடிகருவியிலைமூக்கரிகருவி, குளிரேகுடமுழவொண்டுமாகும். . . . ஆ-௬.

குறிஞ்சியென்னும்பெயர்—மலைச்சார்நிலனுஞ்செம்மலர்முள்ளியுங்,குறிஞ்சிநிலப்பாடலுங்குறிஞ்சியென்றாகும். . ஆ-௫.

கூழென்னும்பெயர்—பல்வகையுணவும்பயிரும்பொன்னுங், கொள்பமாதோகூழென்கிளவி. . . . ஆ-௫.

கூளியென்னும்பெயர்—நட்புத்தொகுதிபேயெனமூன்றும்,வைத்தனர்கூளியாகவகுத்தே. . . ஆ-௫.

கைக்கிளையென்னும்பெயர்—ஒருதலைக்காமமும்யாழிலோர்நரம்புந், தெரியிற்கைக்கிளையெனப்பெயர்சிலனும். . ஆ-௨

கொன்னெனனும்பெயர்—அச்சம்பய
னிலிகாலம்பெருமையோ, டப்பெயர்நான்குங்
கொன்னெனவறைவர். . . ஆ௨௬.

கோவென்னும்பெயர்—அந்தரங்குவி
சம்பாரிஞேடத்திரம், வுந்தநீர்திசைமலைவேன்
மன்னவன், விழிபசுகோவென. வேண்டினர்பு
லவர். . . . . ஆ௰௧.

கோதையென்னும்பெயர்-பூப்புனைமா
லையுமாலைபுனைமாதருந், தோற்புனைவின்னுண்
டொடர்கைக்கட்டியுங், கோச்சேரன்பெயர்ம
யிர்காற்றுங்கோதை. . . . ஆ௫.

கோலென்னும்பெயர்-நிறையறிதுலாமும
ஞ்சநமெழுதுகருவியு, மிறைவன்முறைநடாத்
தலும்யாழ்நரம்புமம்புங், குதிரைமத்திகையுங்
கோலென்றாகும். . . . ஆ௫.

கோளென்னும்பெயர்—அலர்கதிர்முத
லாமமரருநாளுங், கொலையுமிடையூறுங்கோ
ளென்றாகும். . . . ஆ௩.

சாமமென்னும்பெயர்—யாமமோர்வே
தமுபாயஞ்சாமம். . . . ஆ௩.

சாறென்னும்பெயர்—விழவுங்களுஞ்
சாறெனவிளம்புவர். . . ஆ௨.

சிக்கமென்னும்பெயர்-—உச்சியுமயிர்வா
ர்சீப்புமுறியுஞ், சிக்கமென்னும்பெயரொடுசி
வணும். . . . ஆ௩.

சித்திரமென்னும்பெயர்-மெய்யேபோ
லப்பொய்யையுரைத்தலுஞ், செய்கோல்வடிவு
மழகுஞ்சித்திரம். . . . ஆ௩.

சிலையென்னும்பெயர்-வில்லுமலையை
யுஞ்சிலையெனவிளம்புவர். . . ஆ௨.

சீரொன்னும்பெயர்-பல்வகையியங்கலோ சைபார, மொல்லுதல்காற்றண்டையொண்புக ழழகு, செல்வஞ்சீர்மைசீரொன்ருகும். ௲எ.

சுடரொன்னும்பெயர்— மதியுஞாயிறுங் கனலியுமற்றைப், பொதுவுறுமொளியுஞ்சுட ரொன்ருகும். . . . ௲ச.

செச்சையென்னும்பெயர்— வெட்சியும் வெள்ளாட்டேறுஞ்செச்சை. . ௲உ.

செம்மலென்னும்பெயர்-இறைவன்பழைம் பூவீரர்புத்திர, ரறையிற்செம்மையோடைந்து ஞ்செம்மல். . . ௲ரு.

சேயென்னும்பெயர்—செவ்வாய்முருக னிளமைபுத்திர, ரிவ்வாறெல்லாஞ்சேயெனவி சைப்பர். . . . ௲ச.

ஞெள்ளலென்னும்பெயர் — சோர்வுமிகு தலுடன்படல்படுகர், நாவினேைெடாலியுந்தெ ருவுஞெள்ளல். . . ௲௬.

தண்டென்னும்பெயர்— தண்டுமூன்று ந்தடியுந்தண்டாம். . . ௲உ.

தபநனென்னும்பெயர்—அனலுமருக் கனுந்தபநனென்ருகும். . ௲உ.

தாணுவென்னும்பெயர்—குற்றியையுந் தூணையுந்தாணுவென்ப. . ௲உ.

தாரென்னும்பெயர்— பூவும்பூமாலையும் போர்முன்செல்கொடிப்படையு, மாவினுக்க ணியுங்கிங்கிணிமாலையுந், தாவில்பெயர்க்கொ டைதாரொன்ருகும். . . ௲ச.

தாவரமென்னும்பெயர்-மரமுமலையும்போ லநிற்பன, தருபெயர்தானேதாவரமாகும்.

தானையென்னும்பெயர்-கைப்படைகாலாட்படையேயாடை, தப்பின்மூன்றுந் தானையென்றாகும். . . . . ஆ-ரு.

திணையென்னும்பெயர்—குலமுமொழுக்கமுமொழுக்கநிகழ்ந்த, நிலமுந்திணையெனநிகழ்த் துங்கிளவி. . . . ஆ-ரு.

துஞ்சலென்னும்பெயர்—சாதலுநிலைத்தலுமுறங்கலுந் துஞ்சல். . . ஆ-ரு.

துத்தியென்னும்பெயர்-சுணங்கும்பொறியுந் துய்ப்பனவுந் துத்தி. . . ஆ-ரு.

துப்பென்னும்பெயர்—வண்ணம்பவளம்வலியோடரக்கென், றெண்ணியநான்குந் துப்பெனவிசைப்பர். . . . . ஆ-ச.

தூவியென்னும்பெயர்—பனிசயுந்தசையும்பறவையிறகுந், தொகுபெயர்தாமேதூவியென்றாகும். . . ஆ-ரு.

தொடியென்னும்பெயர்-ஒருபலம்வளையேதொடியென்றாகும். . . ஆ-உ.

தொய்யிலென்னும்பெயர்—உழவுநிலத்திலெழுவதோர்புதலுங்,குழையுமகிழ்ச்சியுமழுகுமென்றிவை, துயருங்கூறுந்தொய்யிற்கிளவி.

நகையென்னும்பெயர்—மகிழ்ச்சியின்விளையாட்டின்வருநகைதானே, மிகழ்ச்சியிடத்துமெய்தற்குரித்தே.

நவமென்னும்பெயர்—ஒன்பதுங்கேண்மையும்புதுமையுநவமே. . . . ஆ-ரு.

நவிரமென்னும்பெயர்—மலையுமுச்சியுமருதயாழ்த்திறனு; நவிரமெனும்பெயர்நடைபெற்றியலும். . . ஆ-ரு.

நாகமென்னும்பெயர்—அரவுங்காரீயமு மமரர்நாட்டொருபெயரு, மலையும்யானையு மொருமரப்பெயருந், தெரியினாகமெனப்பெ யர்சிவணும். . . ஆ௬௯.

நாகென்னும்பெயர்-கோடுமெருமையு மரையுநந்து, மீனுவிளமையுங் கெழுமையுமி ளமரமு, நாகெனும்பெயரினடைபெற்றிய லும். . . . . ஆ௭.

நாஞ்சிலென்னும்பெயர்-எயிலுறுப்புமு படைநாஞ்சிலாகும். . . ஆ௨.

நாணென்னும்பெயர்—மாதர்மங்கலமு மணியுமா நமும், பாசமுநாணெனுஞ்சொல்வி ற்பயிலும். . . ஆ௪.

நீலமென்னும்பெயர்—நீலமலருநீலநிற த்தனவு, நீலமென்னும்பெயரொடுநிகழும். உ.

நூழிலென்னும்பெயர்-குவவிற்படரோ ர்கொடிப்புல்லு நூழில், . ஆ௨.

நேரொன்னும்பெயர்—உடன்படல்கொ டையொத்தன்மாறுதனுட்பஞ், சமன்பாதிமி குதிதலைப்பாடுதனிமையென, நிகழ்ந்தவீரைந் துநேரொன்கிளவி. . . . ஆ௰.

பகலென்னும்பெயர்-—நாளுமொளியு நடுவும்பிளத்தலும், பாகுபடுத்தலும்பகலென் கிளவி. . . . ஆ௫.

படையென்னும்பெயர்—சயநம்பல்ல ணந்தானையுழுநாஞ்சில், பயனென்றுணாக்கும் படையென்கிளவி. . . ஆ௪.

பண்ணையென்னும்பெயர்-ஆயமுமகளி ர்விளையாடற்றொழிலும், பாய்புனற்படுகரும் பண்ணையென்றாகும். . . ஆ௩.

பதமென்னும்பெயர்—சோறும்வழியுஞ்சொல்லுங்காலு, மீரமுஞ்சேமமும்புனலுங்காலையும்,பாவலொட்டையும்பதமெனப்பகர்வர். . . . ஆ-அ.

பயிரென்னும்பெயர்—விதந்துகட்டியவழக்கும்விலங்கொடுபுட்குரலும், பசும்புல்லும்பைங்கூழும்பயிரென்றாகும். . . ஆ-ரு.

பரியென்னும்பெயர்—விருத்தமுஞ்செல்வமுமாவினுமமும், பாதுகாத்தலும்பரியென்கிளவி. . . . ஆ-ூ.

பல்லமென்னும்பெயர்-கரடியின்பெயருங்கணக்கிலோர்குணிப்பும், பகழியின்பெயரும்பல்லமென்றாகும். . . . ஆ-௲.

பற்றலென்னும்பெயர்-தொடலும்வளைத்தலும்பிணித்தலும்பற்றல். . ஆ-௲.

பனியென்னும்பெயர்—அச்சமுந்துன்பமுநடுக்கமுந்துகிநமும், பற்றியசீதமும்பனியெனப்படுமே. . . ஆ-ரு.

பாணியென்னும்பெயர்-நெடித்தற்பொழுதுநீரொடுகையும்,பாடற்பல்லியமும்பாணியென்றாகும். . . . ஆ-ச.

பாலையென்னும்பெயர்—நீரின்றிவேனிற்றெறுநிலனுமரநிலப்,பாடலும்பாடற்சுவையும்பாலை,பொருள்வயிற்பிரிதலும்புணர்ந்துடன்போதலு, மதுபிரிவுணர்த்தலும்பாலையாகும்.

பாலென்னும்பெயர்—பகுத்தல்பக்கந்திசையியல்பென்ன,வகுத்தநான்கும்பாலென்றாகும். . . . . ஆ-ச.

பாழியென்னும்பெயர்—ஊரும்வலியு முறையுளுஞ்சயநமும், பாழியென்றுபகரப் படுமே.

புரையென்னும்பெயர்—உயர்வுங்குற்ற முமுவமைச்சொல்லும், புரையென்கிளவிப் பொருளொடுபுணரும். . . ஆ௰.

புலவனென்னும்பெயர்—அமரருங்கவிஞருமாடுநரும்பாடுநரும், பொருநருமறிஞரும் புலவனெனப்படுமே. . . ஆ௯.

பூவையென்னும்பெயர்-காயாமரமுநாகணவாய்ப்புள்ளும்,பூவையென்னும்பொருளொடு புணரும். . . . ஆ௰.

பொதியென்னும்பெயர்—நிதியுஞ்சொற்பயனுநிகழ்பலபண்டமும், பொதியென்கிளவிப்பொருளொடுபுணரும்.

பொருநனென்னும்பெயர்-பொரும்போர்த்தலைவரும்பெருங்கூத்தின்கொடியரும்,பொரும்படைவீரரும்பொருநனெனப்படுமே. ௰.

பொறியென்னும்பெயர்-திருவைம்பொறியந்திரமிலாஞ்சனையே,புகழ்ச்சிப்புலவர்பொறியெனப்புகல்வர். . . ஆ௪.

பொறையென்னும்பெயர்-மலைசுமைபாரமம்பர்சேந்தனே, டுலவியபொறுமைபாரைநதும்பொறையே. . . ஆ௫.

மடங்கலென்னும்பெயர்-ஊழித்தீச்சிங்கமுகமுடிவிடியென,வாழித்தமிழோர்மடங்கலென்ப,கொடுங்கூற்றின்பெயருநோயுங்கூறும். ௯.

மடலென்னும்பெயர்-பூவினிதழும்பனையிதழ்போல்பவும்,வாய்பாடுனாக்கின்மடலென்கிளவி. . . . ஆ௨.

மதுவென்னும்பெயர்-தேனுந்தேறலு மதுவெனச்செப்புவர். . . ஆ உ.

மருதமென்னும்பெயர்—பழனநிலனு மந்நிலப்பாடலு, மருதமென்னும்பெயரின்வ ழங்கும். . . . ஆ உ.

மள்ளனென்னும்பெய்யர்-அருந்திறல்வீரர் க்கும்பெருந்திறலுழவர்க்கும், வருந்தகைத்தா குமள்ளனெனும்பெயர். . ஆ உ.

மறமென்னும்பெயர்—கொலையுஞ்சேவ கமுங்கொடுவினைச்செயலு, வலியுஞ்சற்றமு மறமெனப்படுமே. . . . . ஆ ரு.

மன்னென்னும்பெயர்-மன்னலுமிடைச் சொல்லுமிறையுமன்னே. . . ஆ ரு.

மாடென்னும்பெயர்—மணியுஞ்செல்வ முநிரையும்பக்கமுந், தநமுமாடென்றுரைக்க த்தகுமே. . . . ஆ ரு.

மாலையென்னும்பெயர்——பொன்னின் மணியிற்பூவிற்சொல்லி, னின்னுறத்தொடுத்தலு மிரவுமந்தியு, மன்னுமியல்புமாலையென்று கும். . . . ஆ ச.

மாலென்னும்பெயர்-மாயோன்பெயரேமய க்கம்வேட்கை, மேகங்காற்றுப்பெருமைகருநி றஞ், சோழன்புதனெனச்சொற்றிடுமாலே. அ.

மாழையென்னும்பெயர்—ஆயமடமை பொன்னுலோகக்கட்டி, யோலைபுளிமாமாலை யென்றுரைக்கும். . . ஆ ங.

முருகென்னும்பெயர்—-விழவுங்குமர வேளுமிளமையு, நறையுநாற்றமுமகிலுமெழு ச்சியும, வெறியாட்டாளனுமுருகெனவிசை ப்பர். . . . ஆ அ.

முல்லையென்னும்பெயர்—காடுசார்நில னுங்கானமல்லிகையு, மோடுபடுவென்றியுங்கற் புமுல்லை. . . . ஆ. ௪.

முளரியென்னும்பெயர்-எரியுந்தாமரை யுநட்பமுமுண்மரமு, முரியகாடுமென்றைந் துமுளரி. . . ஆ. ௫.

மையென்னும்பெயர்-குற்றமுமாடுங்கரு மையுங்கொண்டலு,மற்றிவைமையெனுஞ்சொ ல்லொடுவருமே. . . ஆ. ௪.

வஞ்சியென்னும்பெயர்—மேற்செலவும் பாவிகற்பத்தொருபாவு, மோர்கொடிப்பிறப் பு மதனுவமைமாதரு,மாற்றரும்பெயர்க்கொ டைவஞ்சியென்றாகும். . ஆ. ௬.

வம்பென்னும்பெயர்—கச்சுநிலையின்மை புதுமைகந்த,மொத்தநான்கும்வம்பெனவுணா ப்பர். . . . ஆ. ௪.

வயிரமென்னும்பெயர்—செற்றமுங்கூர் மையுஞ்சேகுமணியும், வச்சிரமும்வன்மையும் வயிரக்கிளவி. . . ஆ. ௭.

வயினென்னும்பெயர்-வயிறேயிடமனை மூன்றும்வயினும். . . ஆ. ௩.

வளமென்னும்பெயர்—பண்டமும்வள ப்பாடும்வளமெனப்படுமே. . ஆ. ௨.

வாகையென்னும்பெயர்-- ஆள்வினைமுத லாஞ்செய்கையுநலனுங், கைவலமுதலாங்கல்வியு மாண்மையுஞ், சால்புமுதலாம்பண்புமீகை யு, மொழுக்கமுதலாந்தவமுமறத்துறையு,மொரு வரினொருவர்வென்றியுமிகுதியும், வருவனவெ ல்லாம்வாகையெனும்பெயர். . ஆ. ௰.

வாமமென்னும்பெயர்-குறளேயழகுகுறங்கேயிடப்பா, லிவையொருநான்கும்வாமமென்ப. . . . . ஆ-சு.

வாரணமென்னும்பெயர்-யானையுங்கோழியுஞ்சங்கும்வாரணம். . . ஆ-ரு.

வாரியென்னும்பெயர்—கடலுநீர்மிகுதியுங்கதவும்வாயிலு, மடையுமென்றிவைவாரியென்ப. . . . ஆ-ரு.

விதியென்னும்பெயர்— இயல்புஞ்செயலும்விதியென்றாகும். . ஆ-உ.

வியங்கோளென்னும்பெயர்—ஏண்ணில்கொளலுமேவலும்வியங்கோள். . ஆ-உ.

விருத்தியென்னும்பெயர்—உரியசொல்லுமுரியபொருளும், விரியவுரைப்பதுவிருத்தியாகும்.

விழுமமென்னும்பெயர்-சிறப்புச்சீர்மையிடும்பையிம்மூன்றும்,விரிக்கின்மேலோர்விழுமமென்ப. . . . ஆ-ரு.

விளரியென்னும்பெயர்—யாழினேர்நரம்புந்திறனில்யாழும், வேட்கைமிகுதியுமிளமையும்விளரி. . . . ஆ-சு.

வெள்ளையென்னும்பெயர்—வெள்ளாடுவெண்பாவெள்ளைவடிவின, வெள்ளையென்னும்பெயரின்விளம்புவர். . ஆ-ரு.

வேழமென்னும்பெயர்-யானையுங்கரும்புங்கொறுக்கச்சியுடனும், வேயுங்கூறும்வேழக்கிளவி. . . . . ஆ-சு.

வையென்னும்பெயர்—நெல்லின்றாளும்புல்லுங்கூர்மையுஞ், சொல்லின்மூன்றும்வையென்றாகும். . . ஆ-ரு,

வைகலென்னும்பெயர்—கழியுநாளும்புலரிக்காலையுந், தழூவும்வைகறங்கலுமுரித்தே. ௬.

வையமென்னும்பெயர்-சிவிகையுமானேறுஞ்சகடமுந்தேரு, மவநியும்வையமெனப் பெயராகும். . . . ௯௫.

புலவிநீக்கியகல்விச்செல்விக், கமிழ்துசுவையீந்தவரும்பெறவின்பத், தொருபெருஞ் செல்வனருவந்தைச்சேந்தன், பகர்வுற்றதிவாகரத்துப்பதினொன்றுவதொரு, சொற்பல்பொருட்பெயர்த்தொகுதிமுற்றிற்று.

பன்னிரண்டாவது,

புல்பொருட்கூடடத்

தொருபெயர்த்தொகுதி.

கூறிய துகூறினுங்குற்றமில்லை, வேறொரு பொருளைவிளக்குமாயின், முன்னரெய்தியபதி னொருதொகுதியுள்ளும், வந்தனவரெல்லாரு சொற்பல்பொருட்பெயர்த், தொகுதியின்வந் தசொற்களென்னெனி, னுண்டுச்சிறப்புவகைக் கெய்தியவை, யீண்டுப்பொதுவகைக்கெய்தவு ம்படுமே.

ஒன்றென்னும்பெயர்-ஒன்றென்பதுவே வீடுபேருகும்.

இருமையென்னும்பெயர்—இருமையெ ன்பதிம்மையுமறுமையும்.

இருவினையென்னும்பெயர்—இருவினை நல்வினைதீவினையாகும்.

இருவகைத்தோற்றமென்னும்பெயர்— இருவகைத்தோற்றஞ்சராசரமென்ப.

இருவகையறமென்னும்பெயர்—இருவ கையறமேயில்லறந்துறவறம்.

இருவகைக்கந்தமென்னும்பெயர்—இரு வகைக்கந்தநற்கந்தந்துர்க்கந்தம்.

இருசுடரென்னும்பெயர்—இருசுடர்சந் திரசூரியராகும்.

இருமரபென்னும்பெயர்—இருமரபுதா ய்வழிதந்தைவழியே.

இருவகைப்பொருளென்னும்பெயர்— இருவகைப்பொருள்கல்விப்பொருள்செல்வப் பொருள்.

இருவகையின்பமென்னும்பெயர்—இருவகையின்பமில்லதுமுள்ளதும்.

இருவகைவீடென்னும்பெயர்-இருவகைவீடுபற்றுவீடுபொருள்வீடு.

மும்மையென்னும்பெயர்-மும்மையும்மையுமிம்மையுமறுமையும்.

முப்பொறியென்னும்பெயர்-மநமும்வாக்குங்காயமுமுப்பொறி.

முச்செய்கையென்னும்பெயர்—படைத்தல்காத்தலழித்தன்முச்செய்கை.

முக்குற்றமென்னும்பெயர்—முக்குற்றங்காமம்வெகுளிமயக்கம்.

முக்காலமென்னும்பெயர்—இறந்தகாலமெதிர்காலநிகழ்காலமென, மொழிந்தமூன்றுகாலமாகும்.

மூவிடமென்னும்பெயர்-முன்னிலைபடர்க்கைதன்மைமூவிடம்.

மூவுலகென்னும்பெயர்—பூமியாகாயஞ்சுவர்க்கமென்ப, தாமொருமூன்றுநிலமெனுந்தகைய.

மூவகைமொழியென்னும்பெயர் —பட்டாங்குபேசல்பழித்தல்புகழ்தலென, முட்டின்றுகுமூவகைமொழியே.

முச்சுடரென்னும்பெயர்—முச்சுடராதித்தன்சந்திரனங்கி.

முத்தீயென்னும்பெயர்-அந்தணர்முத்தீகாருகபத்தியந், தென்றிசையங்கியாகவநீயம்.

முச்சீவவனலென்னும்பெயர்—உதரம்விந்துபூதவனலென, வொருமூன்றுகுஞ்சீவவனலே.

முக்குணமென்னும்பெயர்-முக்குணஞ் சாத்துவிதமிராசதந்தாமதம்.

சாத்துவிதகுணம்—சாத்துவிதஞாநந் தவமுண்மைநல்லரு, ளார்த்தமோநமோடைம் புலனடக்கல்.

இராசதகுணம்—தாநந்தவமே தருமம்பே ணன், ஞாநங்கல்விநலனிவைதெரித, வீநமில் லாவிராசதகுணமே.

தாமதகுணம்—தாமத நிறைபேருண்டி மடிவஞ்சங், காமநீதிக்கேடுறக்கஞ்சலமே

மூவகைத்தாநமென்னும்பெயர்—முத லிடைகடையெனமூவகைத்தாநம்.

மூவகைத்தியாகமென்னும்பெயர்-தியா கத்தினம்மைமூவகையதனே,டுத்தமமத்திமமத மமென்ன,முற்றியதாங்குமூவகைத்தாநம்,வலி யுமெலியுஞ்சமனுமாகும்.

உத்தமதாநம்—அறத்தினாற்றியவரும் பெரும்பொருளைப், புறத்துறைக்குற்றமூன் றறுத்தநற்றவர்க்கு,கொள்கெனப்பணிந்து குறையிரந்தவர்வயி, னுள்ளமுவந்தீவதுத்த மதாநம்.

மத்திமதாநம்—ஆதுலரந்தகருமரூறுப் பிலிகள், செவிடர்க்கீவதுமத்திமதாநம்.

கடைப்படுதாநம்—ஆர்வம்புகழ்மேயச் சங்கைம்மாறு, காரணங்கண்ணேட்டங்கடைப் பாடென்றிவை, யேழுங்கடைப்படுதாநவுதவி.

திரிகடுகமென்னும்பெயர்—திரிகடுகஞ்சு க்குமிளகுதிப்பலி.

திரிபலையென்னும்பெயர்—திரிபலையாவ துகடுநெல்லிகான்றி.

திரிபுரமென்னும்பெயர்-மும்மதில்பொன்னும்வெள்ளியுமிரும்பு, மன்னசிவன்முன்னழித்தமுப்புரமே.

சூரியன்மூவகைவீதியின்பெயர்—திருத்தகுமேடமிடபமிதுநம்.

நானிலத்தின்பெயர்—நானிலங்குறிஞ்சிமுல்லைமருதநெய்தல்.

சதுரங்கமென்னும்பெயர்—சதுரங்கம்யானைதேர்குதிரைகாலாள்.

நாற்கரணமென்னும்பெயர்—மநம்புத்தியாங்காரஞ்சித்தநாற்கரணம்.

நாற்கதியென்னும்பெயர்—நாற்கதியும்பர்மக்கள்விலங்குநரகர்.

நால்வகைஇழிச்சொல்லென்னும்பெயர்-பொய்குறளைகடுஞ்சொற் பயனிலசொல் லென, விவ்வகைநான்குமிழித்தசொல்லே.

நால்வகைவேதத்தின்பெயர்-நால்வகைவேதமிருக்குத்தைத்திரியஞ், சாமவேதமதர்வணந்தானே.

நால்வகையரணென்னும்பெயர்—மலையரண்காட்டரண்மதிலரணீரர, ணவையறுசிறப்பினால்வகையரணே.

நால்வகைக்கேள்வியென்னும்பெயர்—அறம்பொருளின்பம்வீடெனநான்குந், திறந்தெரிந்துகேட்டனால்வகைக்கேள்வி, சொன்னநான்கினுமொத்தேயெழுகுத,லைவகைக்கேள்வியாமெனவறைவர்.

நால்வகைப்புலமையென்னும்பெயர்-கவியேகமகன்வாதிவாக்கியென, விவ்வொருநான்கேபுலமைக்கியல்பே.

அவற்றுட்கவியின்வகை—ஆசுமதுரஞ்சித்

திரம்வித்தாரமெனும், பாவகைபாடுவோன்கவி யெனப்படுமே.

கமகன்வகை—ஞாபகஞ்செம்பொருண டையினெப்பொருளுங், காசின்றுரைப்போன் கமகனுகும்.

வாதிவகை—எதுவுமேற்கோளுமெடுத்து க்காட்டிப், போதினளவுஞ்செய்துதன்சொன் னிறீஇ, வாதிற்பிறர்சொன்மறுப்பான்வாதி.

வாக்கிவகை-அறம்பொருளின்பம் வீடெ னுந்திறங்கள், கேட்கவேட்கவினியனகூறுமாற் றமுடையோன்வாக்கியாகும்.

ஆசுகவிவகை-கொடுத்தபொருளிற்றொடுத் தவின்பத்தி, னடுத்தபொழுதிற்பாடுவதாசுகவி.

மதுரகவிவகை-பொருளின்பொலிவுஞ்சொ ல்லின்செல்வமுந், தொடையுந்தொடைக்கண் விகற்பமுந்துறைநீ, திருவகமுதலாமலங்காரமு ட்கொண்,டோசைபொலிவுற்றுணர்வோருளங்க ட்கு,மாகடலமிழ்தம்போற்பாடுதன்மதுரகவி.

சித்திரகவிவகை—மாலைமாற்றேசக்கரஞ் சுழிகுள, மேகபாதமெழுகூற்றிருக்கை, காதை கரப்பேகரந்துறைப்பாட்டே, பாதமயக்கே க பாவின்புணர்ப்பே, கூடசதுக்கங்கோமூத்திரி யே, யோரினத்தெழுத்தாலுயர்ந்தபாட்டே, யொற்றுப்பெயர்த்த லொருபொருட் பாட் டே, சித்திரப்பாவேவிசித்திரப்பாவே, விகற்ப நடையேவினவுத்தரமே, சருப்பதோபத்திர ஞ்சார்ந்தவெழுத்தே, வருக்கமும்மற்றும்வட்டநா ற்கடலு, மொருக்குடன்வைத்தவுதாரணநோக் கி, விரித்துமறைத்துமிறைக்கவிப்பாட்டுந்,தெ ரித்துப்பாடுவதுசித்திரகவியே.

வித்தாரகவிவகை-மும்மணிக்கோவையும்

பன்மணிமாலையு, மறமுங்கலிவெண்பாட்டுமட
லூர்ச்சியுங், கிரீடையுங்கூத்தும்பாசாண் டத்
துறையும், விருத்தகவிலதையுமியலிசைநாடகத்
தொடு, விரித்துப்பாடுவதுவித்தாரகவியே.

நால்வகைப்புண்ணியத்தோற்றமென்னு
ம்பெயர் — நால்வகைப்புண்ணியத்தோற்றந்
தவத்துடன், மேலாமொழுக்கந்தாநங்கல்வி.

நால்வகைநிலையென்னும்பெயர்-சிலையோர்
நால்வகைநிலைபைசாச, மாலீடமண்டிலம்பிரத்
தியாலீடம்.

அவற்றுட்பைசாசநிலைவகை—ஒருகானி
லைநின்றொருகான்முடக்கும், பரியாயமென்ப
துபைசாசநிலையே.

ஆலீடநிலைவகை-வலக்கான்மண்டவித்திடக்
கான்முந்துறு, மதற்பெயராலீடநிலையதாகும்.

மண்டிலநிலைவகை—இருகான் மண்டலித்
திடுதன்மண்டிலநிலை.

பிரத்தியாலீடநிலைவகை—வலக்கான் முந்
துற்றிடக்கான்மண்டலிப்பிற்,பிரத்தியாலீடமெ
னப்பெயர்பெறுமே.

நான்குயிர்த்தோற்றவகைப்பெயர்—பை
போர்குடரின்முட்டையினிலத்தின், மெய்யக
வியர்வையினான்குயிர்த்தோற்றம்.

ஐந்திணைவகைப்பெயர்-ஐந்திணைகுறிஞ்
சிபாலைமுல்லை, வந்தநெய்தன்மருதமாகும்.

பஞ்சவாசவகைப்பெயர்—தக்கோலமே
லமிலவங்கஞ்சாதிக்காய், கர்ப்பூரமென் றிவை
கமழ்பஞ்சவாசம்.

பஞ்சாங்கவகைப்பெயர்-திதியேவாரநாள்
யோகங்கரணமெனப், பகருஞ்சோதிடப்பஞ்
சாங்கமாகும்.

பஞ்சமாசத்தவகைப்பெயர்—பஞ்சமா சத்தந்தொறுளைநரம்பு, கஞ்சனைபாடலெனக் கழறினரே.

மதநன்பஞ்சபாணவகைப்பெயர்-மதநன் பஞ்சபாணமாவன, முல்லையசோகுமுழுநீலஞ் சூதப்பூ,வல்விமுளரியோடைந்தெனமொழிப.

பஞ்சபாணச்செயல்வகை—மதன்பஞ்ச பாணச்செயலுந்மத்தந், தீரஞ்சந்தாபம்வசீக ரணமோகநம்.

பஞ்சசயநவகைப்பெயர்-மயிர்ச்சேண ம்பஞ்சுமெத்தைவண்பட்டாந்தூவி, மயிர்றுந் தண்வீப்பாய்பஞ்சசயநம்.

சயநவகை—மலர்ச்சயநஞ்சலைசயநந்தோ ற்சயநமற்றும், பழிப்பில் பதினைந்துஞ் சயந மென்ப.

பஞ்சபாதகவகைப்பெயர்—பஞ்சபாத கங்கொலைகளவுகள்ளுண்ட, லெஞ்சலில்குருநிந் தைபொய்யுமென்ப.

ஐம்பால்வகைப்பெயர்—ஒருவனொருத் திபலவொன்றுபலவென, வறியக்கூறியபாலைந் தாகும்.

ஐம்பான்முடிவகைப்பெயர்— ஐம்பான் முடியேகொண்டைசுருள்குழல், வம்பார்பனிச் சைவார்மயிர்முடியே.

ஐந்துண்டிவகைப்பெயர்-கடித்துப்பரு கிவிழுங்கிநக்கி, யெடுத்துசசுவைத்தலிவ்வையை ந்துண்டி.

குதிரைநடைவகைப்பெயர்—மல்லகதிம யூரகதிவாநரகதியொடு, சொல்லியசசகதிசரகதி யென்னப், பல்லியற்பரிமாவிற்கைந்தொழின டையே.

ஐவகைவினுப்பெயர்—அறியான்வினுவல றிவொப்புக்காண்ட, லையமறுத்தலவனறிவுதா ன்கோடன், மெய்யவர்க்குக்காட்டலோடைவ கைவினுவே.

ஈசனைம்முகவகைப்பெயர்—சத்தியோ சாதம்வாமமகோரந், தற்புருடமீசானமெனவீ சர்க்கைம்முகம்.

பஞ்சபூதவகைப்பெயர்—மண்ணுநீருங் கனலுங்காற்றும், விண்ணும்பஞ்சபூதமென்ப.

ஐம்பொறிவகைப்பெயர்-மெய்வாய்கண் மூக்குச்செவியைம்பொறியே.

ஐவகைத்தாயர்வகைப்பெயர்—பாராட் டுந்தாயூட்டுந்தாய்முலைத்தாய், கைத்தாய்செவி வித்தாயைந்தெனக்கழறுவர்.

அந்தணாறுதொழில்வகைப்பெயர்-ஓத லோதுவித்தல்வேட்டல்வேட்பித்த, லீதலேற்ற லென்றிருமூவகை, யாதிக்காலத்த ந் த ணா று தொழில்.

அரசாறுதொழில்வகைப்பெயர்—அரசா றுதொழிலோதல்வேட்டல், புரைதீரப்பெரும் பார்ப்புரத்தலீதல், கரையறுபடைக்கலங்கற்ற ல்விசயம்.

வணிகராறுதொழில்வகைப்பெயர்—வணி கராறுதொழிலோதல்வேட்ட, லீதலுழவுபசுக்கா வல்வாணிகம்.

வேளாளராறுதொழில்வகைப்பெயர்-வே ளாளராறுதொழிலுழவுபசுக்காவ, றெள்ளி தின் வாணிபங்குயிலுவங்காருகவினை,யொள்ளியவிரு பிறப்பாளர்க்கேவல்செயல்.

குயிலுவத்தொழில்வகை—குயிலுவம்வா த்தியங்கொட்டுதலாகும்.

காருகவினைவகை—பருத்திநூல்பட்டுநூல்மைத்தாடையாக்கலுஞ், சுமத்தலும்பிறவுங் காருகவினைத்தொழில்.

ஆறங்கவகைப்பெயர்—ஆறங்கமந்திரம் வியாகரணநிகண்டு,சந்தோபிசிதிநிருத்தஞ்சோதிடம்.

அறுசமயவகைப்பெயர்-அறுசமயம்வைசேடிகநையாயிக, மறுவின்மீமாஞ்சையாருகதம் பௌத்தம், பிரதிலோகாயதமென்னும் பெற்றிய.

பாடாண்டத்துறைவகைப்பெயர்—பாடாண்டத்துறையுமிவற்றுட்பலவாம், பேசிற்றெண்ணூற்றறுவகைப்படுமே.

ஆறுட்பகைவகைப்பெயர் - ஆறுட்பகை காமம்வெகுளியுலோப, மாறுகொண்மோகம தமாற்சரியம்.

அறுவகைத்தானையின்பெயர்-வேற்றானை வாட்டானைவிற்றானைமேலோர், தேர்த்தானைபரித்தானைகளிற்றுத்தானையென, வாற்றல்சான் றவறுவகைத்தானை.

நன்னாட்டமைதியறுவகைப்பெயர்-செல்வம்விளைவுபல்வளஞ்செங்கோன்மை, கொலைகுறும்பின்மைகொடும்பிணியின்மை,யிவ்வயின்று நன்னாட்டமைதி.

அறுசுவைவகைப்பெயர்—அறுசுவைதித்தித்தல்புளித்தல்கைத்தன், மறுவறுதுவர்த்தல்கூர்த்தல்காழ்த்தல்.

ஆசியலறுவகைப்பெயர்-படைநங்குடியுங்கூழுமமைச்சு, மரணுநட்புமரசியலாறே.

அறுவகையுலகநடையின்பெயர்-அறநிலையறமுமறநிலையறமு, மறநிலைப்பொருளுமறநி

லைப்பொருளு, மறநிலையின்பமுமறநிலையின்ப முமென, வாறுவகைத்தேயுலகினடைபே.

அறநிலையறத்தின்வகை-வருணக்காட்பிற்பிற ழாநெறிநிலை, பெறுதற்பொருளாற்பேணும் பெற்றி, யறநிலையறமென் றறைந்தனர்புலவர்.

மறநிலையறத்தின்வகை — ஆநிரைமீட்டல ரும்பகைதெறுத, லூநமில்செஞ்சோற்றுதவி ப்போர்வயி, னீநஞ்செய்தலுமறநிலையறமே.

அறநிலைப்பொருள்வகை-நெறிவழிநின் று நெறியாலுழந்து, பெறும்பொருளென்பவ றநிலைப்பொருளே.

மறநிலைப்பொருள்வகை—அமருழந்து கொண்டவுயருந்திறைகொண்டவுந், தவறுசெ ய்தீயோர்தண்டப்பொருளுங், கவர்சூதுவென் றவுமறநிலைப்பொருளே.

அறநிலையின்பவகை — ஒத்தகுலமுமொத் தவாயுளு, மொத்தசெல்வமுமொத்தநலனு, ம த்தகவுடையதறநிலையின்பம்.

மறநிலையின்பவகை-எறுதழுவவிலக்கமெ ய்தல், கூறுபொருள்கொடுத்தல்வலிதிற்கோட ன், மாறுபடுநிலையமறநிலையின்பம்.

கருமபூமியாறுவகைப்பெயர்-உழவுதொ ழிலேவரைவுவாணிகம், விச்சைசிற்பமென்றித் திறத்தறுதொழில், கற்பநடையதுகருமபூமி.

போகபூமியின்வகை-பதினாருட்டைக்குமர னும்விதிவழிப், பன்னீராட்டைக்குமரியுமாகி, யொத்தவன்பினுமொத்தநலத்தினுங், கற்பகந ன்மரநற்பயனுதவ, வாகியசெய்தவத்தனவுமவ் வழிப், போகநுகர்வதுபோகபூமி.

போகபூமியறுவகைப்பெயர்—ஆதியரி வஞ்சநல்லரிவஞ்ச, மேமதவஞ்சமிரணவஞ்சந்

தேவகுருவமுத்தரகுருவமெனப், போகபூமிய றுவகைப்படுமே.

சக்கரவர்த்திகள்வகைப்பெயர்-அரிச்சந்திர னளன்முசுகுந்தன்புரூரவா, சகரன்கார்த்தவீரி யனென்ன, வறுவகைச்சக்கரவர்த்திகளாகும்.

எழுதீவின்வகைப்பெயர்—முதலதுநாவ லந்தீவிறலித்தீவே.குசையின்றீவேகிரவுஞ்சத்தீ வே, சான்மலித்தீவேதெங்கின்றீவே, புட்கரத் தீவேயெனுமோரேழு, மேத்தியபெருந்தீவே ழிற்கும்பெயரே, யேழ்பெருந்தீவிற்குமேழ் பொழிலெனப்படும்.

எழுசமுத்திரவகைப்பெயர்-உவரோடுகரு ம்புமதுநெய்தயிர்பால்புனன், மாகடலேழெ னவகுத்தனர்புலவர்.

மேலேழுலகவகைப்பெயர்—உலகேழ்பூ லோகம்புவலோகஞ், சுவலோகம்மகலோகஞ்ச னலோகந், தவலோகஞ்சத்தியலோகம்.

கீழேழுலகவகைப்பெயர்—அதலவிதல சுதலநிதல, தராதலரசாதலமகாதலமென்னப், பாதலமோரேழுலகெனப்பகர்வ,ரிருவகையே ழ்பதினாலுலகென்ப.

சத்தகுலபருப்பதவகைப்பெயர்—இம யமந்தரங்கைலைவடவிந்த, நிடதமேமகூடநீல கிரியெனக், குலவரையேழுங்கூறுமென்ப.

ஏழுமேகவகைப்பெயர்-புட்கலமாவணி புட்கலதரணி, சலாநிதிசலநிதிசகல்வருணி, நீலி யென்பவெழுமுகிலின்பெயர்.

ஏழுமழைவகைப்பெயர்-பொன்னும்பூவு ம்புனலுஞ்செந்நெலு, மண்ணுங்கலனுஞ்சோ ரியுமதன்பெயல்.

ஏழுநரகவகைப்பெயர்—பெருங்களிற்று வட்டம்பெருமணல்வட்ட, மெரியின்வட்டம் புகையின்வட்ட, மிருளின்வட்டம்பெருங்கீழ் வட்ட, மரிபடைவட்டமென் றெழுவகைநரகம்.

சத்தமாதர்கள்வகைப்பெயர்-பிாமாணி யிந்திராணிவைணவிவராகி, கௌமாரிமாயேசுரி மாகாளியெழுவர்.

ஏழுவகைத்தாதென்னும்பெயர்—இரத முதிரமென்புதோறசை, மூளைசுக்கிலமெழுவ கைத்தாதே.

செங்கோல்வேந்தனெழுவகைப்பேற்றி ன்பெயர் - அறம்பொருளின்பமன்புமறுமை, திறம்பாப்புகழ்மதியென்றிவையேழும், பெ றுஞ்செங்கோலினெறிச்செல்வேந்தன்.

அட்டமாநாகவகைப்பெயர்—அட்டமா நாகம்வாசுகியநந்தன், விட்டபற்பன்மகாபற் பன்சங்க, பாலன்றக்கன்கார்க்கோடகனே, யே லுமாகுளிகனென்றெண்வகைநாகம்.

அட்டதிக்குப்பாலகர்வகைப்பெயர்-இந்தி ரனங்கியமனிருதிவருணன், வந்தவாயுக்குபேர னீசாந், னென்னவெண்டிசையுலோகபாலகர்.

அட்டதிக்குப்பாலகர்சார்திசைவகைப்பெ யர்—கீழ்த்திசைமுதலாச்சார்ச்சியுடைமையி, னவ்வவர்பெயரொடுமத்திசைமொழிப.

சூரியசந்திரர்சார்திசைப்பெயர்—கீழ்த் திசையருக்கற்குவடதிசைச்சோமர்குச், சார்ச் சியாகச்சாற்றினர்புலவர்.

எண்டிசைக்குறிப்பின்வகைப்பெயர்— கொடியும்பூனையுஞ்சியமுஞாளியு, மிடபமுங்க ழுதையும்யானையுங்காகமு, மென்பவெண்டி சைக்குறிப்பினவாகும்.

அட்டமங்கலவகைப்பெயர்-கவரிநிறைகுடங்கண்ணுடிதோட்டி, முரசுவிளக்குப்பதாகையிணைக்கயல், லளவில்சிறப்பினட்டமங்கலவகை.

அட்டமூர்த்தவகைப்பெயர்-பார்நீர்தேயுவாயுவாகாயஞ், சூரியனிந்தியுமாநனட்டமூர்த்தம்.

அட்டமாசித்திவகைப்பெயர்-அணிமாமகிமாகரிமாவிலகிமா, பிரார்த்திபிராகாமியமீசத்துவம்வசித்துவ, மாம்பெறற்கரியவட்டமாசித்தி.

அட்டாங்கயோகவகைப்பெயர்—இயமநியமமாசநம்பிராணயாமம், பிரத்தியாகாரந்தாரணைதியாநஞ், சமாதியென்பவெண் வகையோகம்.

அவற்றுள்-இயமத்தின்வகை-கொல்லாவிரதமெய்ம்மைகூறல், கள்ளாமைபிறர்பொருட்காதலின்மை, யிவ்வயினிந்தியமடக்கலுமியமம்.

நியமத்தின்வகை-தவமொடுதூய்மைதத்துவநூலோர்தன், மநமுவந்திருத்தறெய்வம்வழிபட, னிணையுங்காலைநியமமாகும்.

சிறப்பிலாவெண்பெயரெச்சவகைப்பெயர்-சிறப்பில்சிதடுமுறுப்பில்பிண்டமுங், கூனுங்குறளுமூமையுஞ்செவிடு, மாவுமருளுமுட்படமக்கட்குந், திண்சிறப்பில்லாவெண்பெயரெச்சம்.

எண்வகைக்காட்சியென்னும்பெயர்—அறமையப்படாமையவாவொன்றின்மை, யறிவுவர்ப்பின்மைமூடமறுத்த, லறப்பழிமறைத்தலழிந்தோரைநிறுத்த, லறத்தைவிளக்கலறுசமயத்தவர்க்கன்புற, லாகுமென்பவெண்வகைக்காட்சி.

எண்குணவகைப்பெயர்— அநந்தஞாநமநந்ததரிசந,மநந்தவீரியமநந்தசுகிமே, நாம

மின்மைகோத்திரமின்மை, யாயுவின்மையழி யாவின்பமென், றேயுங்காலையிறைவனெண்கு ணம்.

எண்வகைக்குற்றத்தின்பெயர்-ஞானாவர ணியந்தரிசநாவரணியம், வேதநீயமோகநீய, மாயுநாமங்கோத்திரமந்த, ராயமென்பவெண் வகைக்குற்றம்.

வணிகரெண்குணவகைப்பெயர்-தனிமை யாதன்முனிவிலனுத,விடனறிந்தொழுகல்பொ ழுதொடுபுணர்த, லுறுவதுதெரிதலிறுவதஞ் சாமை, யீட்டல்பகுத்தலென்றிவையெட்டும், வாட்டமில்லாவணிகரதியற்குணம்.

எண்வகைக்கணமென்னும்பெயர்—நீரி ன்கணமுந்தீயின்கணமு, மந்தரகணமுமியமா நன்கணமு, மதியின்கணமுமெரிகதிர்க்கணமு, மாருதகணமுமாநிலக்கணமு மெட்டுமுன் ன ர்ச்சீர்க்குவருங்கணம்.

முதற்சீரிலக்கணவகை-அசைமூன்றதுவே முதற்சீரிலக்கணம்.

அவற்றுள் நீரின்கணவகை-நேர்முதலாகிநி ரையிணைபின்வரி,னீரின்கணமெனநிகழுஞ்சீரே.

தீயின்கணவகை—நேர்நடுவாகிநிரையிரு பாலுஞ், சேருஞ்சீரதுசெந்தீக்கணமே.

அந்தரகணவகை-இறுதிநேராயிணைநிரை முன்னர், வருஞ்சீரந்தரகணமெனவழங்கும்.

இயமாநன்கணவகை—நேர்மூன்றாகிய சீரியமாநன்.

மதியின்கணவகை-முந்துநிரையாயிணைநேர்பி ன்வரி,னிந்துவின்கணமென்றியம்பப்படுமே.

எரிகதிர்க்கணவகை- நிரைநடுவாகிநேரிரு பால்வரி, னெரிகதிர்க்கணமென்றியம்பல்வே

மாருதகணம்—இறுதிநிரையாயிணைநே ர்முன்னர், வருசீர்மாருதகணமெனவைப்பர்.

நிலத்தின்கணம்—நிரைமூன்றதுசீர்நிலத் தின்கணமே.

அவ்வெட்டினுணர்கணவகை- நிலனுநீருமதியு மியமாநனு, நலமிகுமூதல்வரிர்பிறநாலூநம்.

எண்வகைமெய்ப்பரிசத்தின்பெயர்-ஓட் டுதல்பிடித்தறீண்டறடவுதல்,கட்டுதல்வெட்ட ல்குத்தலூன்றலென், றெட்டுந்தக்கமெய்ப்பரி சமென்ப.

எண்வகைக்கணிதத்தின்பெயர்-சங்கலித ம்விபகலிதங்குணநம்பாகாரம், வர்க்கம்வர்க்க மூலங்கநமொடு,கநமூலமென்னக்காட்டுமெண் கணிதம்.

எண்வகைமணத்தின்பெயர்—பிரமம்பிரசா பத்தியமாரிடந், தெய்வங்காந்தருவமாசுரமிரா க்கதம்,பைசாசமென்னப்பகருமெண்மணமே.

எண்வகைவெற்றியின்பெயர்— (வெண்பா) வெட்சிநிரைகவர்தன் மீட்டல்கரந் தையாம், வட்கார்மேர்செல்வது வஞ்சியா,மு ட்கா, ரெதிரூன்றல்காஞ்சியெயில் காத்தனொச் சி, யதுவளைத்தலாகுமுழிஞை, (சூத்திரம்) அதி ரப்பொருவதுதும்பையாகும், போர்க்களத் துமிக்கார்செருவென்றதுவாகையா, மத்திணை த்தொழிலுமத்திணைப்பூவு, மப்பெயர்பெறுவ தந்நிலத்துரித்தே.

எண்டிசையானைப்பெயர்-—ஐராவதம் புண்டரிகம்வாமநங்குமுத, மஞ்சநமபுட்பத ந்தஞ்சார்வபூமஞ், சுப்பிரதீபமென்னச்சொல் லு, மெண்டிசையானைக்கியலும்பெயரே.

நவகண்டத்தின்பெயர்--வடபால்விதேகந்தென்பால்விதேகங், கீழ்பால்விதேகமேல்பால்விதேகம், வடபாலிரோவதந்தென்பாலிரோவதம்,வடபாற்பரதந்தென்பாற்பரத, மத்திமகண்டமென்றித்திறமென்ப,நாவலந்தீவினவகண்டப்பெயரே.

நவபுண்ணியத்தின்பெயர்— எதிர்கொளல்பணிதலிருக்கைகாணீர், -புதுமலர்தூபம்விளக்கேபுகழ்த, லறுசுவையுண்டியமைந்தோர்க்காற்றுத, னவபுண்ணியத்தினமாகும்.

நவதாரணைப்பெயர்— நாமதாரணைவச்சிரதாரணை, மாயாதாரணைசித்திரதாரணை, செய்யுட்டாரணைநிறைவுகுறைவாகிய, வெண்பொருட்டாரணைசத்ததாரணை, வத்துதாரணைசதுரங்கதாரணை, நவதாரணையினமாகும்.

நவதாளப்பெயர்—அரிதாளமருமதாளஞ்சமதாளஞ்சயதாளஞ், சித்திரதாளந்துருவதாளம், நிவிர்ததாளம்படிமதாளம், விடதாளமிவையேநவதாளமென்ப.

நவமணிப்பெயர்—வைரம்வைடூரியமுத்துமாணிக்கம்,பவளங்கோமேதகமிந்திரநீல,மரகதம்புட்பராகநவமணிப்பெயரே.

நாடகநவரசப்பெயர்—சிங்காரம்பெருநகைகருணைவீரிய,மற்புதம்பயம்ரௌத்திரங்குற்சைசாந்த, மெனனநாடகத்தியலுநவரசம்.

பத்துத்திசைப்பெயர் — கிழக்குந்தெற்கும்மேற்கும்வடக்குமென, நடக்குமென்ப நாற்பெருந்திசையு, மந்தராளந்திசைநாற்கோணங், கீழ்மேற்றிசையொடுபத்தெனக்கிளப்பர்.

தசாங்கத்தின்பெயர்—ஆறுமலையுமியானையுங்குதிரையு, நாடுமூருங்கொடியுமுரசுந், தாருந்தேருந்தசாங்கமெனப்படுந், தேரினதற்குச்சின்னமுமென்ப.

அருச்சுநன்றசநாமததின்பெயர்—பற்குநன் சுவேதவாகநன்பார்த்தன், சவ்விபசாசிகிரீடிதநஞ்சயன், விசயன்வீபற்சு,காண்டிவன்கிருட்டினனருச்சுநன், றசநாமங்களாகும்.

வேளாளர்பத்துவகைத்தொழிற்பெயர்-ஆணைவழிநிற்றலழிந்தோரைநிறுத்தல், கைக்கடனாற்றல்கசிவகத்துண்மை, யொக்கல்போற்றலோவாமுயற்சி,. மன்னிறைதருதலொற்றுமைகோடல்,விருந்துபுறந்தருதறிருந்தியவொழுக்கம்,வேளாண்மைமைந்தர்க்கோரீரைந்தே.

அரிதசாவதாரப்பெயர்— மீனேயாமைவராகநரசிங்கம், வாமநன்பரசிராமனிராமன், பலதேவன்வசுதேவன்வருகற்கியென், றுகுமீரைந்துமரியவதாரம்.

சிற்பத்தொழிற்பத்துறுப்பின்பெயர்—கல்லுமுலோகமுஞ்செங்கலுமரமு, மண்ணுஞ்சுதையுந்தந்தமும்வண்ணமுங், கண்டசருக்கரையுமெழுகுமென்றிவை, பத்தேசிற்பத்தொழிற்குறுப்பாவன.

எகாதசவுருத்திரர்பெயர்-மாதேவன்சிவனுருத்திரன்சங்கர, னீல்லோகிதனீசாநன்விசயன், வீமதேவன்பவோற்பவன்கபாலி,சௌமியனேகாதசவுருத்திரராகும்.

துவாதசாதித்தர்பெயர்—வைகத்தன்விவச்சுதன்மார்த்தாண்டன்பாற்கர, னிரவியு

லோகப்பிரகாசனுலோகசாட்சி, திரிவிக்கிரம னுதித்தன்சவித்திரன்றுவட்டா, பங்கிசமாலி யெனப்பன்னிரண்டாதித்தர்.

உயிர்வேதனைபன்னிரணடுவகைப்பெயர்— அனலுஞ்சீதமும் வாதமும்பனியும், புனலுமா யுதமும்விடமும்விடமருந்தும், பசியுநீர்வேட் கையும்பிணியுமூன்வறுமையும்,உயிரின்வேதனை யோரீராறே.

பதினெண்பாடையின்பெயர்-அங்கம்வங்க ங்கலிங்கங்கௌசிகஞ், சிந்துசோனகந்திரவிட ஞ்சிங்கள, மகதங்கோசலமராடங்கொங்கணந், துளுவஞ்சாவகஞ்சீநங்காம்போச, மருணம் பப்பரமெனப்பதினெண்பாடை.

தேவர்பதினெண்கணவகைப்பெயர்— அமரர்சித்தரசுரர்தைத்தியர், கருடர்கிந்நரர்கி ம்புருடர்காந்தருவ, ரியக்கர்விஞ்சையரிராக்க தர்பூதர், பைசாசரந்தரர்முநிவருரக,ராகாயவா சியர்போகபூமியரொனப், பதினெண்கணத்தி ன்பகுதியாகும்.

அரசர்க்குரூவகையிற்பதினெண்கிளைவ கைப்பெயர்—அமாத்தியர்புரோகிதர்சேநா பதியர், தவாத்தொழிற்றூதர்சாரணரொன்றி வை, யரசர்க்காகுமைம்பெருங்குழுவுங்,காரண க்கிளைஞருங்கருமவிதிகாரருங், கநகச்சுற்றமுங் கடைகாப்பாளரு, நகரமாக்களுநனிபடைத்த லைவரு, மிவுளிமறவரும்யானைவீரரு,மரசர்க்கெ ண்பேராயமென்ப, வடுத்தநட்பாளருமந்த ணாளரு, மடைத்தொழிலாளருமருத்துவக்கலை ஞரு, நிமித்தகாரருநீணிலவேந்தர்க், குறாத்த

வைம்பெயருறுதிச்சுற்ற, முறைத்தமுப்பாலு முயர்குடைவேந்தர்க்குப், பகுத்தபதினெண் கிளைப்பரலோரே.

யாக்கையிற்பதினெண்குற்றப்பெயர்— பசியுநீர்வேட்டலும்பயமும்வெகுளியு, முவ கையும்வேண்டலுநினைப்புமுறக்கமு, நரையு நோய்படுதலுமரணமும்பிறப்பு, மதமுமின்ப முமதிசயமும்வியர்த்தலுங், கேதமுங்கையநவு மாகுமென்ப, மாயயாக்கைக்குப்பதினெண்கு ற்ற, மிக்குற்றநீக்கியோர்வச்சிரயாக்கையோர்.

பதினெண்புராணத்தின்பெயர்—மச் சியங்கூர்மம்வராகம்வாமநம், பிரமம் வைண வம்பாகவதஞ்சைவ, மிலிங்கம்பௌடிகநாரதீ யங்காருடம், பிரமகைவர்த்தமார்க்கண்டேயங் காந்தம், பிரமாண்டமாக்கிநேயம்பதுமமென் றிவை, பாற்படுபதினெண்புராணமாகும்.

உபபுராணம்பதினெண்வகைப்பெயர்— உசநங்கபிலங்காளிசநற்குமாரஞ், சாம்பவஞ்சி வதந்மஞ்சௌரந்துருவாச, நந்திநாரசிங்கந்நா ரதீயம், பராசரம்பார்க்கவமாங்கிரமாரீச, மாந வம்வாசிட்டலிங்கம்வாருணம், மாமுப்புராணம றுமூன்றென்ப.

தருமநூல்பதினெண்வகைப்பெயர்— மனுவேயத்திரிவிண்டுவாசிட்ட, மியமம்பாபத்த ம்பமிரோவத்ஞ்சுரலிவம்,கோசமங்கிராமம்பரா சரம்வியாசந், துவத்தாங்கவுத்துவங்காத்திகே யந்திசாகரம், பிரகற்பதியே மங்குலீயமென்ன த்-தருமநூல்பதினெட்டாகுமென்ப.

பதினெண்யாகவகைப்பெயர்.—சோதி ட்டோமமக்கினிட்டோம,மத்தியக்கினிட்டோ

மம்வாசபேய, மத்திராத்திரஞ்சோமயாகங்கா டகஞ்,சாதுரமாசியஞ்சவித்திராமணியே, புண டரீகஞ்சிவகாமமயேந்திர, மங்கிசசனேயிராசசூய, மச்சுவமேதம்விச்சுவதித்து, நரமேதம்பிரமமேதமென்னப், பதினெட்டியாகப்பலபெயராகும்.

இருபத்தைந்துதத்துவத்தின்பெயர்—நிலநீர்நெருப்புக்காற்ருகாயம்மென, வளவினின்றவைம்பெரும்பூதமு, மைந்துவாயிலுமவற்றின்புலனுங், கைகால்குதம்வாய்மாநுடக்குறியெனக், கருமேந்திரியர்களைந்துமவற்ருெடு, மநம்புத்தியாங்காரஞ்சித்தநான்கு, மியமாநனேடிருபத்தைந்துதத்துவம்.

இருபத்தெட்டலங்காரப்பெயர்—உருவகமுவமைவழிமடக்குநிலைமடக்கு, விரிசுடர்விளக்கெனவிரவிவருனவும், வேற்றுமைநிலையவெளிப்படுநிலையே, வார்த்தைதன்மைபிறபொருள்வைப்பெனப், பாற்படக்கிளந்தபகுதியின் வருனவுஞ், சிறப்புமொழிசிலேடை மறுத்துமொழிநிலையே, நோக்கேயுட்டொடர்தொகைமொழிமிகைமொழி, யுடனிலைகூட்டமுவமாநமுருவக, நுவலாநுவர்சிதலைக்கட்டியமொழி, நிதரிசனம்பாராட்டொருங்கியநிலையே, யையமுயர்வேவிரவியல்வாழ்த்தென, வெய்தக்கூறியவெழுநான்கலங்காரம்.

முப்பத்திரண்டறத்தின்பெயர்—ஆதுலர்சாலையோதுவார்க்குணவறு, சமயத்தோர்க்குணவுபசுவுக்குவாயுறை, சிறைச்சோறையந்தின்பண்டமகச்சோறு,மகப்பெறுவித்தன்மகவளர்த்தன்மகப்பா, லறவைப்பிணஞ்சுடுதலற

வைத்தூரியம், வண்ணார்நாவிதர்வதுவை பூணூணோய்மருந்து, கண்ணாடிகாதோலைகண்மருந்துதலைக்கெண்ணெய், பெண்போகஞ்சுண்ணம்பிறர்துயர்காத்த, றண்ணீர்ப்பந்தர்மடந்தடாகங்கா, வாவுரிஞ்சுநடுதறியேறுவிடுத்தல், விலையுயிர்கொடுத்துக்கொலையுயிர்மீட்ட, விச்செயன்முப்பத்திரண்டறமென்ப.

முப்பத்துமுத்தேவர்வகைப்பெயர்-ஆதித்தர் பன்னிருவரச்சுவிநிகளிருவ,ரீசர்பதினொருவரொண்மர்வசுக்க,ளாகமுப்பத்துமுத்தேவரென்ப.

ஓரறிவுயிர்வகைப்பெயர்—ஒன்றேபுலன தொன்றேயுடைமையின், மற்றைப்புல்லுமரனு மோரறிவே.

ஈரறிவுயிர்வகைப்பெயர்——உற்றறிபுலனு நாவுமுடைமையி,னட்டையுநந்தும்போல்வ தீரறிவே.

மூவறிவுயிர்வகைப்பேயர்——உற்றறிபுலனு மூக்குமுடைமையின், முற்பெறுசிதலெறும்பி னையமூவறிவே.

நான்கறிவுயிர்வகைப்பெயர்—உற்றறிபுல னுமூக்கொடுகண்ணும், பெற்றவண்டுஞெண்டு நாலறிவே.

ஐந்தறிவுயிர்வகைப்பெயர்— உற்றறிபுல னுமூக்கொடுகண்செவி, மக்களுமாவுமைந்தறி வினவே.

ஆறறிவுயிர்வகைப்பெயர்-மநத்தோடா றறிவினரோமக்க, ளொருசார்விலங்குமதுபெற ற்குரிய.

காவியவியற்கைவகைப்பெயர்——காவிய வியற்கைவிரிக்குங்காலை, யாரியந்தமிழாணேரிதி

னடக்கி, யுலகின்றோற்றமுமூழியினிறுதியும், வகைசாரெண்ணூற்றுறுவாதியருமம, வேதநாவினர்வேதியரொழுக்கமு,மாதிக்காலத்தரசர்செய்தியு, மவ்வவர்நாட்டாலறியுமாற்றலு, மாடியும்பாடியுமறிவுவரக்கிளத்தல்.

ஆண்பார்பிள்ளைப்பாட்டின்வகைப்பெயர்—திங்களிரண்டிற்றெய்வக்காப்பு, மைந்தாந்திங்களிற்செங்கீரையு, மேழாந்திங்களிற்றாலப்பாட்டு, மெட்டாந்திங்களிலின்னமுதூட்டலு, மொன்பதாந்திங்களிற்சப்பாணியும், பத்தாந்திங்களின்முத்தங்கூறலு, மாண்டுவரையகவயினீண்டுவருகென்றலு, மீரொண்டிங்களினம்புலிகாட்டலு, மிரண்டாமாண்டிற்சிறுபறைகொட்டலு,மூன்றாமாண்டிற்சிற்றில்சிதைத்தலு, நாலாமாண்டிற்சிறுதேருருட்டலும், வைத்தமுந்நான்காண்டெல்லைவரையிற்,கச்சிற்சுரிகைகாமுறப்புனைதலும், பெற்றியாண்பார்பிள்ளைப்பாட்டே.

பெண்பாற்பிள்ளைப்பாட்டுவகைப்பெயர்-ஆண்டுவரையகவயின்முன்னுரைத்தனவு, மூன்றாமாண்டிற்குழமணமொழிதலு, மைந்தின்முதலாவொன்பதின்காறு, மைங்கணைக்கிழவனையார்வமொடுநோற்றலும், பனிநீர்தோய்தலும் பரவையாடலுஞ், சிறுசோறடுதலுஞ்சிற்றிலிழைத்தலு, மூசலாட்டுமென்றிவையுள்ளிட்டுப், பேசியபெண்பாற்பிள்ளைப்பாட்டே.

பேடியிலக்கணவகைப்பெயர்—பேடியிலக்கணம்பேசுங்காலை, நச்சுப்பேசலுநல்லுரையோதலு, மச்சுமாறியாண்பெண்ணாகியுங், கைத்தலமொன்றைக்கடுகவீசியு, மத்தகத்தொரு

கைமாண்புறவைத்தலும், விலங்கிமிதித்தலும் விழிவேறாகியுந், துளங்கித்தூங்கிச்சுழன்றுதுணிந்து. நக்குநாணியுநடம்பலபயின்றும், பக்கம்பார்த்தும்பாங்குதிருத்தியுங், காரணமின்றிக்கடிபலகொண்டும், வாரணிகொங்கையைவலியநலிந்து, மிரங்கியுமழுதுமயர்ந்தருவருத்துங், குரங்கியுங்கொடியுங்கோதுகள்செய்து, மருங்கிற்பாணியைவைத்தும்வாங்கியு, மிரங்கிப்பேசியுமெல்லேலென்று, மின்னவைபலவுமியற்றுதலியல்பே.

கரந்துறைகோளின்வகைப்பேர்—அரவுக்கோளிரண்டும்பருதியுஞ்சூரியனும், பரிவேடமுந்தூமமுமிந்திரவில்லும், பெருகுவான்மீனுங்கரந்துறைகோளே.

திருப்பொறிவகைப்பெயர்—சங்குசக்கரமதியமரிமாவிடபம், வேழமாசநநிறைகுடந்தோட்டி, விளக்குமுடிகடல்சூலங்கொடியே, தாமரைசெயிர்தீரிரேகைதிருப்பொறி, யாகுமென்பரறிந்திசினோரே.

ஐம்புலத்துயிரிழக்கும்வகைப்பெயர்—யானையூற்றின்மீனதுசுவையி, லசுணமிசையிலளிநாற்றத்தி, லேனைப்பதங்கமுருவங்கண்டுயி, ரிழப்பவாகுமென்மனார்புலவர்.

அரனூர்தியாயுதவகைப்பெயர்—அரனுடையூர்தியிடபமாகும், பரசுசூலம்பிநாகவில்படையே.

அரியூர்தியாயுதவகைப்பெயர்-அரியுடையூர்திகருடனாகுஞ், சக்கரஞ்சங்குதண்டுவாள்சாரங்கம், பலமிக்கமாயோன்பஞ்சாயுதமே.

பலதேவன்படைகொடிவகைப்பெயர்—பலதேவன்படைகலப்பையாகுங், கொடிபனையாமெனக்கூறினர்புலவர்.

அயனூர்திபடைகொடிவகைப்பெயர்—அயனுடையூர்தியன்னப்புள்ளு, படைபாசமங்குசங்கொடிவேதமென்ப.

குமரனூர்திகொடிபடைவகைப்பெயர்-குமரனூர்திமயிலும்யானையுங், கொடியேகோழிபடைவேலாகும்.

சாத்தாவினூர்திகொடிதாரவகைப்பெயர்-காரியூர்தியானையாகும்,கோழியவர்க்குங்கொடியாகும்மே, பூரணைபுட்கலையுமவர்தாரமாகும்.

காமன்கொடிபடைவகைப்பெயர்-காமன்கொடிசுறவுகரும்புவில்லும், பூவவன்வாளிபொருபடையாகும்.

இயமனூர்தியாயுதவகைப்பெயர்—இயமனுடையூர்திபெருமையேறு, படைபாசந்தண்டுமாகுமென்ப.

காலனாயுதவகைப்பெயர்-கூற்றின்படைகொடுங்கணிச்சியாகும்.

குபேரனூர்திவகைப்பெயர்—குபேரனூர்திபுட்பகவிமானமு, நரவாகனமுமாமெனநவில்வர்.

சூரியனூர்திவகைப்பெயர் — தனிக்காற்பொற்றேரருக்கனூர்தி.

சந்திரனூர்திவகைப்பெயர்—வெண்மதியூர்திவிமானமாகும்.

இந்திரனூர்திபடைகொடிவகைப்பெயர்-இந்திரனூர்திவெள்ளைவாரணம், படையேவச்சிரமிடிகொடியாகும்.

காளியூர்திகொடிவகைப்பெயர்-காளியூர்தியா ளியாகும், பேயதாகுமவள்பெருங்கொடியே.

மூதேவியூர்திகொடிவகைப்பெயர்-கழு தையூர்தியுங்காக்கைக்கொடியு, மொழியுங்கா லைமூதேவிக்காகும்.

சேரன்கொடிபாண்டியன்கொடிவகைப் பெயர்—சேரற்குவிற்கொடிதென்னற்குக்கய ற்கொடி.

சோழன்கொடிவகைப்பெயர்—சோழற் குப்புலிக்கொடியாகுமென்ப.

வேள்புலவரசர்கொடிவகைப்பெயர்— கேழல்வேள்புலவரசர்கொடியே, யவ்வவர்பெ யருங்கொடியும்படையு, மவ்வவர்தம்மோடறி ந்துணர்ந்துகொளுமே.

அரசுவாவின்குறிவகைப்பெயர்—காலோ ர்நான்குந்தனிக்கையுங்கோசமும், வாலுறுப் போடேழுமாநிலந்தோய்ந்து, பாலுஞ்சங்கும் போலுங்காலுகிரது, காலினுஞான்றவொருதனி க்கையினும், வாயினும்வாலினுமருப்பினுங்கோ றல், வல்லதுமதின்மூன்றுமுழச்சுற்றுடைத்தா கி, யேழுமுழமுயர்ந்தொன்பதுமுழநீண்டது, தீயுமிழ்சிறுகண்ணுஞ்செம்புகருமுடைத்தாய், முன்புயர்ந்துபின்பணிந்ததாயி, னவ்வியல்யா னையையரசுவாவென்ட.

அநுலோமர்வகைப்பெயர்—பார்ப்பார ரசர்வணிகர்வேளாளரென, நாற்குலத்துவரூஉந் தங்குலநடையி, னுயர்ந்தவாணினுமிழிந்தபெ ண்ணினும், பிறந்தகூட்டத்தவரநுலோமர்.

பிரதிலோமர்வகைப்பெயர்—இழிந்தவா ணினுமுயர்ந்தபெண்ணினும், பிறந்தகூட்டத் தவர்பிரதிலோமர்.

அந்தராளர்வகைப்பெயர்—அநுலோம குலத்தாணினுமவ்வழிப், பிரதிலோமகுலப்பெ ண்ணினுமாகி, யடுத்தகூட்டத்தவரந்தராளர்.

விராத்தியர்வகைப்பெயர்—பிரதிலோம குலத்தாணினும்பின்னி, னநுலோமகுலப் பெ ண்ணினுமாகி, வியந்தோர்கூட்டத்துப்பி ற ந் தோர்விராத்தியர்.

பல்லக்கணக்குவகைப்பெயர்-இருவிரலக லத்தறுவிரலாழத்தொரு, குழிநிறையப்பள்ளை யாட்டுமயிர்த்தொகைப், பற்றியதாகும் ப ல் ல மென்கணக்கே.

பதாதிவகைப்பெயர்-ஒருபெருங்களிறுமொ ருபெருந்தேரும், புரவிநான்கும்படைஞராம் பதின்மரும், பதாதியென்றுபகரப்படுமே.

சேநாமுகவகைப்பெயர்—பதாதிமும்ம டிசேநாமுகமே.

குமுதவகைப்பெயர்—சேநாமுகமும்மடி தானுங்குமுதம்.

கணவகைப்பெயர்—குமுதமும் மடிகொ ண்டதுகணமே.

வாகினிவகைப்பெயர்—கணமும்மடியின் பெயர்வாகினியே.

பிரதனைவகைப்பெயர்—வாகினிமும்மடி யாகும்பிரதனை.

சமூகவகைப்பெயர்—பிரதனைமும்மடி யாகுஞ்சமூகம்.

அநீகவ்கைப்பெயர்—சமூகமும்மடியநீ கமாகும்.

அக்குரோணிவகைப்பெயர்—அநீகமை யிருமடியக்குரோணி.

ஒன்றுபத்தின்பெயர்—ஏகமொனறேத சம்பத்தாகும்.

நூற்றின்பெயர்-ஆயிரத்தின்பெயர்—நூ றுதசமேசகசிரமாயிரம்.

பதினாயிரத்தின்பெயர்—பதினாயிரம்பெ யரயுதமாகும்.

நூறாயிரத்தின்பெயர்—அயுதம்பத்தேநி யுதநூறாயிரம்.

பத்துநூறாயிரத்தின்பெயர்—நியுதம்பத் தேபிரயுதமாகி, யியலும்பத்துநூறாயிரமே.

நூறுநூறாயிரத்தின்பெயர்-பிரயுதம்பத் தேகோடியென்ப, வரைந்தநூறுநூறாயிரமன் னும்.

அர்புதமென்னும்பெயர்-கோடிபத்தே யர்புதமாகும்.

சமுத்திரவகைப்பெயர்-அற்புதம்பத்தே சமுத்திரமாகும்.

அத்தியவகைப்பெயர்—சமுத்திரம்பத் தேயத்தியமாகும்.

மத்தியவகைப்பேயர்—அத்தியம்பத்தே மத்தியமாகும்.

பாரதவகைப்பெயர்—மத்தியம்பத்தே பாரதமாகும்.

மகாகும்பத்தின்பெயர்—நூறுகோடிம காகும்பமாகும்.

நிகர்ப்வகைப்பெயர்-மகாகும்பம்பத்து நூறாயிரங்கோடிநிகர்வம்.

மகாபற்பமென்னும்பெயர்—நிகர்வநூறாயிரங்கோடிமகாபற்பம்.

பிரமகற்பமென்னும்பெயர்—சங்கம்பாரதம்பத்தேபிரமகற்பம்.

செம்பொற்கிடையானம்பர்சேந்த,னன்ணாரளணலமிகுநாட்டத்தன், பன்னியசிறப்பிற் பன்னிரண்டாவது, பல்பொருட்கூட்டத்தொருபெயர்த்தொகுதி, பன்னிருதொகுதியும்பண்பொடுமுற்றின்.